சத்தியவேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS', JAFFNA. 1876,ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

83-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1958-ம் ஆண்டு மைகீசி மாதம் 8-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 17-ம் இலக்கம்

அப்போஸ்தலிக்க ஸ்தானுபதி ஆண்டகை அவர்களின் வரவு

யாழ்ப்பாணக் கத்தோலிக்க மக்களின் குதூகலமிக்க வரவேற்பு

இலங்கைக்குப் பரிசுத்த பாப்பரசரின் அப்போஸ்தலிக்க ஸ்தானுபதியாகிய மகாமேன்மைதங்கிய மொன்சிஞ்ஞோர் ஜேம்ஸ் ஆர். கொக்ஸ் ஆண்டகை அவர்கள் சென்ற 30-4-58 புதன்கிழமை சாயந்தரம் அதிகாரபூர்வமாக யாழ்ப்பாணத்துக்கு முதன்முறையாக விஜயஞ் செய்யலாயினர். நமது மேற்றிராணியாண்டவர் சமேதராய் அனுராதபுரத்திலிருந்து எழுந்தருளி வந்த ஆண்டகைஅவர்களைப் பண்னிரு கார்களில் எதிர்கொண்டுநின்றகத்தோலிக்கபிரமுகர்கள் நகரின் பிரவேசவாயிலில் காத்துநின்று ஆசாரத்துடன் வரவேற்று, ஊர்வலமாக அழைத்துவந்து அர்ச். மார்த்தினர் குருமடச்சந்தியை அடைந்ததும், ஆண்டகைகள் இருவரும் வாகனத்தைவிட்டிறங்கவே, அங்கு காத்துநின்ற பெருஞ்சனக் குழாம் கரகோஷஞ்செய்தும், பாப்பரசின்கொடிகளைக் காத்தேந்தி அணிவகுத்துநின்ற ஆயிரக்கணக்கான பாடசாலைப் பிள்ளைகள்குழாம் வாழ்த்தொலி செய்தும் ஸ்தானுபதி ஆண்டகையை ஆடம்பரமாக வரவேற்றுநின்றன. ஆசனக்கோவில் பிரதமபூப்பர் செவாலியர் டக்டர் சென்ஜோண் புஷ்பராசசிங்கி அவர்கள் அவருக்கும், செவாலியர் எஸ். அருளானந்தம் அவர்கள் எமது மேற்றிராணியாண்டவருக்கும் பரிமளபுஷ்பாரங்கள் சூட்டிநின்றார்கள்.

ஆசனக்கோவில் பிரவேசம்

அதன்மேல் நாதசுரவாத்தியங்கள் இசைக்க, மணிகள் ஆர்ப்பரிக்க, வெண்முகில்கவித்து அழகுசெய்தாற்போன்று வெண்துவசங்களால் சிங்காரிக்கப்பெற்றிருந்த வீதிவழியாக அழகிய பூம்பந்தரின்கீழ் நிலபாவாடைமீது ஆண்டகை அவர்கள் இவர்ந்துசென்று ஆசனக்கோவில் பெரியவாயிலைச் சேரவே, ஆங்கு திருச்சபைச் சம்பிரதாயப்படி வரவேற்று ஆலயத்தினுள்ளே அழைத்துச்செல்லப்பெற்றுப் பலிபீடஸ்தானத்தை அடைந்து, நம்மேற்றிராணியாண்டவரை வலதுபுறமாகக்கொண்டு, பாப்பரசரின் நேற்பட்டவர்த்தனர்கள் இருவரையும் வலமிடமாகக்கொண்டு குருப்பிரசாதிகள்பலர் புடைசூழ ஆசனத்தெழுந்தார். அவ்வேளை மின்சாரதீபங்களாலும், பன்னிறத்துவசங்களாலும், பசுந்தளிர்களாலும், மலரினங்களாலும் அலங்கரிக்கப்பெற்று மக்களால் நேங்கியிருந்த ஆலயத்தின் மனோகரகாட்சியோ வர்ணிக்குந் தரமன்று. ஆங்கு முதல்வைபவமாக ஆசாரியவஸ்திரங்கள்அணிந்து எல்லவருமே பக்திப்பரவசம்கொள்ள அவரால் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்படலாயிற்று.

வந்தனோபசார வரவேற்பு

திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதம் முடிந்ததும் ஸ்தானுபதிஅவர்கள் ஆலயசிங்காசனத்தெழுந்தருளவே, ஆசனக்கோவில் கட்டளைக்குரவர் வண. சி. யோண்மேரி சுவாமியவர்கள் முன்சென்றுபடித்த வந்தனோபசாரப் பத்திரம் வருமாறு:

அப்போஸ்தலிக்க ஸ்தானுபதி ஆண்டகை அவர்களே!

எமது அன்புக்குரிய அப்போஸ்தலிக்கமேய்ப்பரான மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர் அவர்களது ஞானஆளுகையின்கீழ் வாழப்பாக்கியம்பெற்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குருப்பிரசாதிகளும், கத்தோலிக்கருமாகியநாம் இலங்கையின்அப்போஸ்தலிக்க ஸ்தானுபதியாக எம்மத்தியில் தாங்கள் எழுந்தருளியிருக்கின்ற இச்சுபசந்தர்ப்பத்திலேதங்களுக்குஅதிகம் இதயபூர்வமும், ஆசாரஉபசாரமும், அன்புநிறைந்ததுமானநல்வரவுகூறுகின்றோம். அலைகடல்போன்று இப்போது கலங்கிக்கொண்டிருக்கும் லங்கா துவீபத்திலே இன்றுஎம்மத்தியில் தங்களைக்காணும்போது, பரலோகத்தை ஏறெடுத்து, எமது பக்திவைராக்கியமிகுந்த ஸ்துதிகளைப் பாடும்படியாக, எல்லாம்வல்ல எம்பெருமான்மட்டிலே நன்றிபெருக்கெடுத்துப் பிரவாகிக்கும் இதயங்களுடன் எமதுகத்தோலிக்க சகோதரர்கள் எல்லவரோடும் ஒன்றுசேருகின்றோம். "கர்த்தரின் நாமத்திலுலே வருகிறவர் ஆசீர்வதிக்கப்படுவாராக!" ஏனெனில், மிகச்சமீபகாலங்களிலே எமக்குவரப்போகின்ற விசேஷ ஆசீர்வாதங்களுக்கெல்லாம் எம்மிடையே தங்கள்வரவை ஓர்முன்னோடியாகக் கண்டுகொள்ளுகின்றோம்.

நாம் மிக்கான ஆழ்ந்தபற்றும், பக்தியும்கொண்டுள்ள பரிசுத்தபாப்பரசரின் பிரதிநிதியாகத் தாங்கள் எம்மிடம் வந்திருக்கின்றமையால், பரிசுத்தஸ்தானத்தின்மட்டிலே நாம்திறம்பாத ஆழ்ந்த விசுவாசபிரமாணிக்கமும், பரிசுத்தபிதாவின்மட்டிலே நீங்காத பற்றும், பக்தியும், வணக்கமும் கொண்டிருக்கின்றோமென்று தங்களுக்கு உறுதிவாக்களிக்கப் பெரிதும்சந்தோஷத்துடன் இதனை ஓர்சந்தர்ப்பமாக்கிக் கொள்ளுகின்றோம். தங்களுக்குநாம் மனமுவந்தளிக்கும் இந்த நல்வரவேற்பானது வடஇலங்கையிலே கத்தோலிக்க ஐக்கியத்தின் உறுதிப்பாட்டுக்கு ஓர் அறிகுறியாகவும், பரிசுத்தபாப்பரசரால் எண்றைக்கும் நீர்ப்பாய்ச்சப்பட்டுள்ள பலம்பொருந்திய வேதவிசுவாசத்திற்கும், உலகத்தின் ஒளியாய்இருக்கிறவரின் பிரதிநிதிகளாயிருந்து எம்மைக் கண்காணிக்கவும், எம்மைப்போஷிக்கவும், எம்மை வழிநடத்தவுமாக அவர் எமக்குத்தந்துள்ளவர்களின் காந்தலான பக்திவைராக்கியத்திற்கும் ஓர் அத்தாட்சியாகவும் இருப்பதாக! எமது வேதவிசுவாசமாகிய விலைமதித்தற்கரிய பொக்கிஷத்தைப்பேணிக் காத்துவைப்பதற்காக நாம் எதிர்நோக்கக்கூடிய கஷ்டங்கள், எதிரிடைகள், சோதனைகள், வேதகலாபனைகள் எத்தனைபெரியனவாய், எத்தனை கசப்பானவையாய் இருந்தபோதிலும் நாம் வேதவிசுவாசத்தில் என்றைக்கும் ஸ்திரமாயும், வீரத்துவமாயும் நிலைத்திருப்போம்! எங்கள் இதயங்களும், மனங்களும் இராயப்பரின் கற்பாறையிலே உறுதியாக நிலைப்படுத்தப்பட்டிருக்கின்றன. எமது விரோதிகள் குரோதங்கொள்ளட்டும், சாத்தானின் பிரசண்டமாருதம் வீசட்டும்; ஆனால், அஞ்சாநெஞ்சராய்ச் சிலுவைச்சின்னத்தின்கீழ்—இராயப்பருடையகொடியின்கீழ் நாம் போராடியேதீருவோம். ஏனெனில், இராயப்பரின்கப்பலில் எமதுசேமமும், இரட்சணியமும் இருந்துவருகின்றன என்பதை நாம்அறிவோம்.

லங்கா துவீபமானது கடந்த 450 ஆண்டுகளாகப் பரிசுத்ததேவதாயாரின் பாக்கியசலாக்கியம்பெற்ற ஓர்நாடாய் — மரியாயின்ஸ்ரீதனமாய் இருந்துவருகிறது என்பதை ஆண்டகைஅவர்கள் அறிந்திருக்கலாம். மருதமடுத்திருசேத்திரமும், தோலகட்டிஆச்சிரமமும் ஆட்சேபணைக்கிடமில்லாத இந்தஉண்மைக்குப் போர்த்தசான்றாய் விளங்குகின்றன. "சிவப்பர்களின் உலகம்ஒன்றிலே நம்பிக்கையின் நீலவர்ணத்தைக் காண்பிக்கின்ற" தேவதாயாரில்தான் — அந்தகாரம்மிகுந்த இந்தஉலகத்தின் நிறைந்தகிமைப்பிரதாபமாய் இருந்துவருகின்ற திருத்தாயாரில்தான் எமதுநம்பிக்கையையும், திடத்தையும் கொண்டிருக்கிறோம்.

மேற்றிராணிமாரும், குருமாரும், சந்நியாசரும், கன்னியாஸ்திரிமாருமான எமதுஅன்புமிக்க மேய்ப்பர்களினதும், அவர்களுடைய துணைவர்களினதும் இனியதொண்டுகளினாலும், எண்ணிலடங்காத தியாகங்களினாலும் எம்மீதுபொழியப்பெற்ற மதிப்பிடவியலாத ஆசீர்வாதங்களுக்காக எமது உள்ளம்நிறைந்த நன்றியறிதலைத் தெரிவிப்பதற்கு விசுவாசிகளாகியநாம் இதனை ஓர்நலலசந்தர்ப்பமாக்கிக்கொள்ள ஆசிக்கின்றோம். அவர்களைநேசித்து அருமை பெருமைபாராட்டி, அவர்களுக்குக்கீழ்ப்படிந்து, ஆன்மாக்களின் இரட்சணியத்திற்காக அவர்கள்ஆற்றிவருகின்ற அருமபிரயாசையான தொண்டுகளிலெல்லாம் எமதுமனப்பூர்வமும், மனோகரமுமான ஒத்துழைப்பை அவர்களுக்கு அருளுவதாகப் பரிபக்தியாய் வாக்குப்பண்ணுவதற்கும் இதனை ஓர்தக்கசந்தர்ப்பமாக்கிக் கொள்ளுகின்றோம்.

ஈற்றில் ஆண்டகைஅவர்களுக்கு எமதுகண்ணியம்மிக்க பற்றுதலையும், நன்றியறிதலையும் தெரிவித்து, தங்களை நாம் அறிந்துகொள்ளவும், எமது தேவைகளைத்தாம்தெரிந்துகொள்ளவும் இவ்வளவுதூரம்கடந்து எம்மத்திக்கு எழுந்தருளிவந்ததற்காகத் தங்களுக்கு நன்றிகூறுகின்றோம். எம்பெருமான் தங்கள்தொண்டுகளை அதிகமதிகமாய் ஆசீர்வதித்தருளுமாறுவேண்டித் தங்கள் பிதாவுக்குரியஆசியை இரந்துநிற்கின்றோம்.

ஸ்தானுபதிஅவர்களின் பதில்

தமக்குப் படிக்கப்பெற்ற வரவேற்புப் பத்திரத்துக்கு ஆண்டகை அவர்கள் அளித்தபதிலின் சாராம்சம்வருமாறு: நமக்கு அன்பாக நீங்கள் அளித்த இந்தமகத்தான வரவேற்பைக்கண்டு எமது இதயம் துடிதுடித்தெழுந்து அகமகிழ்ச்சிகொள்ளுகின்றது. இந்த வரவேற்பாலே நீங்கள் பரிசுத்தபாப்பரசரிலும், அவரது ஸ்தானுபதியாக வந்துள்ள நமமிலும் கொண்டுள்ள அன்பையும், அபிமானத்தையும் பிரசித்தமாகக் காண்பித்திருக்கிறீர்கள். நம்மை நீங்கள்கண்டபோது பரிசுத்தபாப்பரசரையே கண்டாற்போன்று அகமகிழ்ச்சி காண்பித்திருக்கிறீர்கள். பரிசுத்தபிதா உலகமடங்கலுமுள்ள தமது ஞானமக்களையெல்லாம் நேரே சந்தித்துப்பேச எவ்வளவோ ஆவல் கொண்டிருக்கின்றார். ஆனால், அவ்வாறு சந்தித்துப்பேச அவர் இயலாதவராயிருக்கின்றார் அதனால், தமது பிரதிநிதிகளை அங்கங்கெல்லாம் அனுப்பிவைத்து அவர்கள்மூலம் தமது ஞானமக்களைக்கண்டுகொள்ளுகின்றார். அவர்களின் சுகசேமங்களை விசாரித்துத் தமது ஆசியை அருளுகின்றார். நீங்கள் திவ்வியநற்கருணையிலும், தேவதாயாரிலும் மிகுந்த பக்தியுள்ளவர்களாய் இருந்துவருகிறீர்களென அறிவது நமக்குப் பெருஞ் சந்தோஷமாகும். எதிர்காலத்தில்வரக்கூடிய கஷ்டங்களைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கின்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புடம்வைக்க வேண்டும்

நியூமன்என்ற உலகப்பிரசித்திபெற்ற கருதினலாண்டவரை அவருடைய பழையநண்பர்களிலொருவர் தரிசிக்கச் சென்று, "கத்தோலிக்க திருச்சபையே தெய்வியகர்த்தரினல் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யானவேதமென்று நன்கறிந்திருக்கிறேன்; ஆனல், அதில்உட்படுவதற்கு நான்வகித்துவரும் உயர்ந்த உத்தியோகபதவியினின்று நீங்கவேண்டியதாயிருக்கும்; அப்படி உத்தியோகத்தைவிட்டுநீங்க நான்தயாராயில்லை" என்றார். அதற்குக் கருதினலாண்டவர் ஒருசிறு துணுக்காகிதத்தில் 'சர்வேசுரன்' எனும் ஓரேவார்த்தையை வரைந்து அதை நண்பனுக்குக்காண்பித்து வாசிக்கச்சொன்னர். அவரும் வாசித்தார். பின்பு கருதினலாண்டவர் தங்கப்பவுண் ஒன்றை அவ்வார்த்தைமேல்வைத்து, இப்போதுவாசியும் என்றார். பவுண அதைமூடிக்கொண்டிருந்தபடியால அவர் அதைவாசிக்கமுடியாமல தத்தளித்தார். ஆனல், இதிலிருந்து கருதினலாண்டவரின் கருத்தை அவர் அறிந்துகொண்டார். அழிந்துபோகும் உலகபொருட்களின்மேல் பற்றுதலாயிருந்தால், சர்வேசுரனைச் சிநேகிக்கமுடியாதென்று தெளிவாய்உணர்ந்தார். "ஐஸ்வரியவான் சர்வேசுரனுடைய இராச்சியத்தில்பிரவேசிப்பதைவிட, ஊசியின்காதில் ஒட்டகம்நுழைவதுஅதிகஎளிதாயிருக்கும்."

உன்முகம் அழுக்குப்படிந்திருந்தால் சவத்தைஎடுத்து முகத்தைக்கழுவிச் சுத்தஞ்செய்வாய். ஆனல், தங்கத்தைச் சுத்தஞ்செய்ய வேண்டுமாகில் தண்ணீரில்போட்டுக் கழுவுவாயா? அதைத் தட்டானிடமகொடுத்து நெருப்பில்போட்டுப் புடம்வைத்துச் சுத்தப்படுத்துவாய் அல்லவா? தங்கத்தில்கலந்திருக்கும் வேற்றுமண்ணெல்லாம் நீங்கியபின் தங்கம் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும். தேவஇஷ்டப்பிரசாதஅந்தஸ்தில் மரிக்கும்ஆத்துமம் சர்வேசுரனின்கண்ணுக்குத் தங்கம்போலிருக்கும். அப்பசொற்பமாசுள்ள அந்தஆத்துமம் உத்தரிக்கிறஸ்தலநெருப்பில் மாசுநீங்கிச் சர்வேசுரனின் கண்ணுக்குப் பரிசுத்தமாய்ப் பிரகாசித்தவுடன் மோட்சபாக்கியம் அடையும்.

பெற்ருரில்இரங்கிய புதல்வர்

இத்தாலியிலே றவென்னகரில் ஓர் உத்தமகத்தோலிக்க குடும்பத்தில் பிறந்தகடைசிப்பிள்ளை தமியான் இராயப்பர். இவர் சிறுவயதிலேயே தமது பிதாவையும், மாதாவையும் இழந்ததால் அனுதைப்பிள்ளையாய் அன்னவஸ்திரமின்றி மகாகஷ்டப்பட்டார். ஆடுமாடுமேய்த்துச் சீவனம்செய்துவந்தார். ஒருநாள் இவர் ஒருவெள்ளிக்காலசக் கண்டெடுத்தார். அதைக்கொண்டு ஓர்கம்பளிவாங்கினல் குளிர்காலத்துக்கு கல்லதுஎன்று எண்ணினர். பசிக்கொடுமையால் வருந்தியவர் அப்பணத்தைக்கொண்டு ஏதாவது பலகாரபக்ஷணம் வாங்கிச்சாப்பிட்டாலென்ன என்றுநினைத்தார். அச்சமயம் தனதுபிரியதந்தையும், அருமைத்தாயும் உத்தரிக்கிறஸ்தலத்தில் வேதனைப்படுகிறார்களே; அவர்களுக்கு இத்தப்பணத்தைக்கொண்டு ஏன்ஒருபூசை செய்வித்து அவர்கள் படும் அகோரவேதனையைத் தணிக்கக்கூடாதென்று யோசித்துக்கொண்டு குருவானவரிடம் போய் அந்தப்பணத்தைக் கொடுத்துத் தமதுதாய்தந்தையரின் ஆத்துமஇளைப்பாற்றிக்காகத் தெய்வியபூசைப்பலி ஒப்புக்கொடுக்கும்படி பிரார்த்தித்தார். சுவாமியாரும் அவரின்இஷ்டப்படி ஓர்பூசைசெய்தார் அன்றுமுதல் அவருடையசீவியத்தில் ஓர் அற்புதமாற்றம உண்டாயிற்று. அவருடைய சகோதரர்களில் ஒருவர் அதிகமதூரத்தில் வசித்துவந்தார். அவர் தனதுசம்பியின் எளிமையைப்பற்றிக் கேள்வியுற்று அவரைத்தம்மிடம் வரவழைத்து மகாஅன்புடன் ஆதரித்தார். அவருடைய உதவியினல் இராயப்பர் உயர்தரகல்லூரியில்படித்துப் பட்டம்பெற்று, பிந்தக்குருப்பட்டமும பெற்றுக்கொண்டார். சிறிதுகாலமசென்றபின் மேற்றிராணியார்பதவியும், கடைசியாகக் கருதினல் பதவியும் அவருக்குக் கிடைத்தன. இந்த உன்னதஅந்தஸ்தில் பரிசுத்தசீவியம்சீவித்துத் தமது 84-ம்பிராயத்தில் பாக்கியமான மரணமடைந்து, திருச்சபையின் பெரிய அர்ச்சியசிட்டவர்களில்ஒருவராய்விளங்குகிறார் தமியான் இராயப்பர்.

வீரத்துவ விசுவாசம்

அர்ச். அதிரியான் வேதசாட்சியாக மரணத்துக்குத் தீர்ப்பிடப்பட்டபோது தமக்குவரப்போகிற வேதசாட்சிமுடியைப்பற்றித் தமதுபத்தினிக்கு அறிவிக்கும்படி காவல்காரர்களின் அனுமதிபெற்று வீட்டிற்குப்போனர். அவருடைய பக்தியுள்ளமனைவியோ தனது புருஷன் ஆ! நிர்ப்பாக்கியமாய்த் தனது விசுவாசத்தையும், யேசுக்கிறீஸ்துவையும் மறுதலித்ததின் நிமித்தமல்லவா சிறையிலிருந்து விடுதலையாகி வருகிறாரெனநினைத்துக் கோபங்கொண்டு கதவைச்சாத்திவிட்டுச் சொன்னதாவது: "ஆ! கோழைச்சதிகாரரே! என்முன் ஒருபோதும் வரவேண்டாம்; தேவஊழியத்தை விட்டுப்பிரிந்து, உமது சிருஷ்டிகருக்கும், இரட்சகருக்கும் துரோகம் புரிந்தநீர் என்முகத்தில் விழிக்கவேண்டாம்; தீர்வைநாளிலே தேவசந்நிதானத்தின்முன் வேதவிரோதியாகியநீர் நிற்கும்போது, உமதுநிர்ப்பாக்கியம் எவ்வளவுபெரியாயிருக்கும்" என்றுகத்தினுள். அர்ச். அதிரியான் தன்மனைவி இட்ட சபதத்தைக்கேட்டு ஆச்சரியப்படாது, உள்ளதை உள்ளவாறு அறிவிக்கவே, அவள்உடனே சந்தோஷப்பட்டதுமன்றி, இருவருமாக ஆண்டவருக்குநன்றியறிந்த தோத்திரம் செலுத்தினர்கள். தேவஊழியத்தில் சமுசாரிகளுக்கு இருக்கவேண்டிய வீரத்துவமான பிரமாணிக்கத்தின் ஆச்சரியமானமாதிரிகை இதுவே!

கார்களைச் செலுத்துவதுபோன்று ஆகாயவிமானங்களைச் செலுத்துவதையும் இலகுவாக்கக்கூடிய தெலிவிஷன் புதியகருவிஒன்றை அமெரிக்கக கடற்படை கண்டுபிடித்துச் செய்து அதுபற்றிய விபரங்களைத் தற்போது வெளியிட்டிருக்கின்றது. விமானப்பிரயாணத்தில் விபத்து ஏற்படாதிருக்க இந்தக்கருவி பெருந்துணையாயிருக்குமாம். இன்னும் இரண்டுவருடங்களில் இது பொதுப்பாவனைக்கு வந்துவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

கோடியற்புதரான அர்ச். அந்தோனியார்மூலம் கேட்டமன்றாடுக் கிடைக்கப்பெற்றேன். எல்லோரும் அவரை நம்பிக்கையுடன் மன்றாடுவார்களாக.

ஓர் நம்பிக்கையுள்ள உபகாரி

* * *

பரிசுத்த சதாசகாய மாதாவிடமும், அர்ச். சூசையப்பரிடமும், சந்தானுளிடமும் கேட்டமன்றாடுகள் கிடைக்கப்பெற்றேன். நன்றியாக இதைப்பிரசுரிக்கின்றேன்.

ஓர் பக்தன்

* * *

பிறேக்நகரின் பாலகயேசு நமக்கு அளித்த எண்ணிறந்த உபகாரங்களுக்கு நன்றியாக இதைப்பிரசுரிக்கிறேன். இன்னுமோர்முறை அவருக்கு நன்றிகூறுகிறேன். அவரின்நாமம் எங்கும்புகழப்படுவதாக.

ஓர் உபகாரி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திரு. சூ. வேதநாயகம் பெர்னந்து
அவர்களின்
அமரதின நினைவு
2-ம் ஆண்டு

பிறப்பு: 2-4-1888 இறப்பு: 9-5-1956

மக்கள் புலம்பல்

ஈராண்டு கழிந்ததுவோ? ஐயோ! இல்லை
இருநொடியாய்க் காணுகின்றேம் அப்பா! உங்கள்
சீராண்ட செல்வமுகம், குழந்தைப்பேச்சு,
சிந்துகின்ற பொன்சிரிப்பு மறந்தோமில்லை.
நீராண்ட கண்களொடு நெஞ்சம் வேக,
நிர்க்கதியாய் நிற்கின்றேம் நேசத்தந்தாய்!
ஏராண்ட விண்ணுலகில் இறைவன்பாதம்
எம்மவர்க்காய் என்றென்றும் வேண்டுவீரே.

"சீவியத்தில் இவரை நாம் நேசித்தோம்; நம்முடைய செபங்களால் கர்த்தரின் வீட்டுக்குள் இவரை நாம் இட்டுச்செல்லும்வரை கைவிடாதிருப்போமாக."

"நித்திய இளைப்பாற்றியை இவருக்குத் தந்தருளும்; முடிவில்லாத பிரகாசம் இவருக்குப் பிரகாசிக்கக்கடவது."

மனைவி:
மரிய ஆரோக்கியம்மாள் கர்வால்ய

மக்கள்:
வி. ரி. பெர்னந்து, எஸ். எம். பெர்னந்து,
நல்லரெட்ணம்மாள் பெர்னந்து, வி. ஜே. பெர்னந்து.

"தனஸ்தான்"
யாழ்ப்பாணம்.

வண. எஸ். ஏ. பெஞ்சமின் சுவாமிகளின்
20-ம் வருட மரண ஞாபகம்

வண. எஸ். ஏ. பெஞ்சமின் சுவாமியவர்களின் ஆன்மஇளைப்பாற்றிக்காக 1958-ம்ஆண்டு வைகாசிமாதம் 13-ந்திகதி செவ்வாய்க்கிழமைகாலை வதிரி அர்ச். அந்தோனியார்கோயிலில் ஒருதுக்கப்பாடற்பூசைநிறைவேறும்.

மனுமக்கள்மீது வைத்துள்ள எல்லையற்றநேசத்தால் சகலவிதபாடுகளும், வேதனைகளும்பட்டு உயிரையும்பலிகொடுத்த நேசயேசுவே! தேவரால் இவ்வுலகில்நின்று அழைத்துக்கொள்ளப்பட்ட வண. பெஞ்சமின்சுவாமியாரின் ஆத்துமத்துக்கு நித்தியசமாதானத்தையும், பிரகாசத்தையும் தந்தருளும்.

அர்ச். அந்தோனியாரின் அற்புதச்செயல்

1958-ம்ஆண்டு மாசிமாதம் 2-ந்திகதி எனதுவீட்டில் 3,200 ரூபாபெறுமதியான தங்கப்பவுண்நகைகளை ஒருவர் திருடிக்கொண்டு ஓடிவிட்டார். பலஇடங்களிலும் தேடியும் திருடியவர் அகப்படவில்லை. கன்றை இழந்த பசுவைப்போலக் கதறிஅழுதுகொண்டு வெற்றிலைக்கேணியில் எழுந்தருளியிருக்கும் கோடிஅற்புதரான அர்ச். அந்தோனியார் பாதத்தடியில்வீழ்ந்து அழுதுகேட்டுக்கொண்டமன்றாடினாவது: "அர்ச். அந்தோனியாரே! எனதுபிள்ளைகளின் நகைகள் திரும்பஎன்கையில் வந்துசேரும்படி கிருபை செய்யவேண்டும்" என்றுமன்றாடினேன். அவர் எனதுமன்றாட்டைக் கேட்டருளினர். சித்திரைமாதம் 28-ந்திகதி நகைகள்திருடியவர் வந்து, நான்தெரியாமல் செய்தகுற்றத்தை மன்னித்துக்கொள்ளுங்கள்; உங்கள் நகைகள்யாவும் சரியாகஇருக்கின்றனவா என்றுபார்வையிட்டு ஒப்புக்கொள்ளுங்கள் என்றார். நாங்கள் அவருக்குநன்றிகூறி நகைகளைப் பார்வையிட்டு ஒப்புக்கொண்டோம். இப்பெரும்நன்மையைச் செய்த கோடிஅற்புதரான அர்ச். அந்தோனியார்செய்த புதுமையை நேர்த்திப்பிரகாரம் பிரசுரம்செய்கிறேன்.

ச. மரியாம்பிள்ளை,
கட்டைக்காடு.

தென்னமெரிக்காவைச் சேர்ந்த கலம்பியா நாட்டிலே செவ்வின்சென்ற டீ போல் தருமசபை அடியிடப்பட்ட நூறும்ஆண்டுநிறைவு ஞாபகார்த்தமாக அந்நாட்டுஅரசாங்கம் ஓர்புதிய தபால்முத்திரையைப் பாவனைக்குவிடத்திருக்கின்றது. இந்த முத்திரையிலே செவ்வின்சென்ற டீ போல் ஓர் குழந்தையைக் கரதேந்திநிற்க, அவருக்கு அக்கபக்கமாக மூன்றுபிள்ளைகள்நிற்குப்பாவனையான சித்திரம் காட்சியளிக்கின்றது.

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 1731

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்

காரைநகர் களபூமி சின்னக்குட்டி கந்தையா

—வழக்காளி

எதிராக

யாழ்ப்பாணம் கொட்டடி
1. மருதன் நாகமுத்துவும்
2. பெண்மாணிக்கம்

—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் N. B./ 1731-ம்இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் இரண்டு அண்டுக்காணிகள் 1958-ஆண்டு ஆனிமாதம் 7-ந்திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்றுபிரசித்தஎலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டிரூபா 5,905/-ம் இன்னும் ரூபா 5000-த்திற்கு 3-7-57தொடக்கம் 5-12-51வரையும் 12% வட்டியும் பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரைக்கும் 100-க்கு 5%வட்டியும் கோட்டுச்செலவுரூபா 294 சதம்40.

காணிகள்விபரம்

வடமராகாணம் யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணர்பண்ணை கோயிற்பற்று வண்ணர்பண்ணை கென் மேற்கிறை வெள்ளைசூரிதறையும் வெள்ளைசூரியவலும் ப. கெ. இ. 12. கிணறும், வீடிம், செய்பயிர் வான்பயிர்களும், எல்லை: கிழக்கு—மேரட்டி, வடக்கு—ராகமுத்திமாணிக்கத்தின்ஆதனம். மேற்கு—வைத்தீஸ்வரன்கோவில்ஆதனம். தெற்கு—சின்னத்தம்பிபெண் எல்லாபோலைக்கும், மறுபேருக்குமுரியஆதனம். இதடங்கலும்.

2. மிதிஇறை வெள்ளைசூரிதறையும், வெள்ளைசூரியவலும், கெ. இ. 1 குளி 4½ யும். இது உலாந்தமேஸ்தர் ரி. கந்தையா என்பவரால் 1955-ம்ஆண்டு மார்கழிமீ 29-ஆ 178-ம்இலக்கத்தில் விஸ்தரிக்கப்பட்ட அளவுபடத்தில் 1இலக்கத்தால் சுட்டப்பட்டதிண்டு. இரண்டுஅறைகளும் பயிர்வகைகளும், மற்றும்அதற்குச்சேர்ந்தவைகளும். எல்லை: கிழக்கு— பண்ணைமேரட்டி, வடக்கு—ராகமுத்து மாணிக்கத்திற்கும், பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு — வைத்தீஸ்வரன்கோவில் ஆதனம். தெற்கு—ஈடுவைத்தவர்களின் 1-ம்ஆதனம். குறித்தகாணியில் 1⅘ குளியிலும் சிறுபிள்ளை மீளும்பிகையின் சகலஉரித்தும்உட்பட இதடங்களும்.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனரும், மதிப்பாளரும்.

24, சப்பெல் வீதி,
யாழ்ப்பாணம். 30-4-58

சூஷியர்களை மனந்திருப்ப முனைந்திருக்கும் சூஷியமாது

ரோமாபுரியிலே சென்றவருடம் இல்லறவாசிகளின் அப்போஸ்தலத்துவ உலகமகாநாடு நடைபெற்றபோது, சூஷியாவை மனந்திருப்புவதற்கு அதிகம்தகுதியான காலம் இதுதானென்று சந்தேகமறநம்புகின்ற ஓர்சூஷியமாதும் அதில்கலந்துகொண்டாள். முன்னர்சூஷியாவிலே கியெவ்நகரில் சஞ்சரித்திருந்த செல்வி இறேன் பொஸ்னவ்என்ற இந்தமாது சூஷியர்களை அணுகி அவர்களை மனந்திருப்புதற்கான வழிவகைகளை அறிந்துகொள்ளும்நோக்கமாக முன்சொன்ன உலகமகாநாடு முடிந்ததும் பிறசெல்ஸ்நகர் சென்று கிழக்குநாடுகளுக்குரிய கிறீஸ்துவ நிலையம்ஒன்றை அங்கு திறக்கலாயினள். தனது உடன்தேசத்தவர்களான சூஷியர்களின் மனோதத்துவத்தை நன்றுகவிளங்கிக்கொள்ளும் மற்றோர் சூஷியரேயன்றி மற்றப்படி மேல்நாடுகளைச் சேர்ந்த மற்றெவரும் அவர்களை அணுகுவதும், மனந்திருப்புவதும் சாத்தியப்படாதெனவ் அவள் கூறுகின்றாள்.

"சூஷியர்களை மனந்திருப்ப ஓர்வாய்ப்பான சந்தர்ப்பம் இப்போது கிடைத்திருக்கிறது; மஸ்கோவில் நடந்தேறிய யுவர்கள்விழாவில் 700 கிறீஸ்துவர்கள் சமூகமளித்திருந்தார்கள்; கிறீஸ்துசமயத்தைப்பற்றி விசாரித்து, அதிகமாக அதைப்பற்றி அறிந்துகொள்ள ஆவல்கொண்டிருந்த சூஷியர்களை அங்கே அவர்கள் போனபோனவிடமெல்லாம் சந்தித்தார்கள்; சூஷியர்களை மனந்திருப்ப ஓர்வாய்ப்பான சந்தர்ப்பம், பிறசெல்ஸ்நகரில் ஆரம்பமாகியுள்ள 1958-ம்ஆண்டின் உலகபொருட்காட்சி நடந்தேறும்காலமாகும்; அநேகசூஷியர்கள் இந்தப்பொருட்காட்சியைப்பார்க்க வருவார்கள்; அப்போது அங்கே பரிசுத்தஸ்தானம் கொண்டிருக்கும் "தேவனின் நகரம்" என்ற அலங்கார காட்சிமண்டபத்தையும் தரிசிப்பதற்கான சந்தர்ப்பத்தை அவர்கள் கண்டுகொள்வார்கள்" என்று இந்த சூஷியமாது கூறுகின்றாள்.

அவ்வாறு சூஷியர்கள் தரிசிக்கும்போது தங்களுக்குவேண்டிய தகவல்களைக் கொடுப்பதற்குத்தங்கள்சாதியினளான செல்விபொஸ்னவ் அங்கு தயாராயிருப்பதைக் கண்டுகொள்வார்கள். கீழ்நாடுகளுக்குரிய கிறீஸ்துவ நிலையத்தின் தகவல் கருமசாலையொன்று சூஷிய பாஷை பேசுகின்ற பரிசாரகர்களுடன் இருக்கக்காண்பார்கள். மாக்ஸியம், கிறீஸ்துவம், சூஷியமனோதத்துவம்என்பனபற்றிய தங்கள் விளக்கங்களுக்கு எவ்விதம் தக்கவிடைகள் அளிக்கலாம்என்பதை அங்கேஅவர்கள் நன்குஅறிந்துகொள்வார்கள்.

ஸ்தானுபதி அவர்களின் பிரசங்கம்

ஸ்தானுபதி ஆண்டவர் அவர்கள் ஆசனக்கோவிலிலே தொழிலாளியான அர்ச். சூசையப்பரின் திருநாளன்றுகாலை செய்த பிரசங்கத்தின் ஓர்பகுதி

சர்வேசுரன் ஆதாமையும், ஏவாளையும் ஏதேன்எனனுஞ் சிங்காரத்தோப்பில் வைத்தார். அவர்கள் சந்தோஷமாகச் சீவிக்கவேண்டுமென விரும்பினர். ஆதாமும், ஏவாளும் பாவஞ்செய்யவே அவர்கள் நித்தியபாக்கியத்தை இழந்தார்கள். பாவத்துக்குத் தண்டனையாக ஆதாம்நெற்றிவியர்வை நிலத்தில்விழத் தன்ஜீவனத்தைத் தேடவேண்டுமெனக் கற்பிக்கப்பட்டான்.

மனிதசந்ததியாரும் இந்தத்தண்டனைக்கு உள்ளானார்கள். தொழிலாளர்என்றமட்டில் தங்கள் சீவனோபாயத்திற்காகக் கஷ்டப்பட்டு உழைக்கவேண்டியதாயிற்று. யேசுநாதர் இப்பூவுலகுக்குவந்தபோது தொழிலாளர்வகுப்பைச்சேர்ந்த குடும்பம்ஒன்றிலே பிறக்கச்சித்தங்கொண்டார். அவருடையகைத்தாதை ஓர்தச்சுத்தொழிலாளி. அவர் தமதுதொழிலைத் திவ்வியஇரட்சகருக்குக் கற்றுக்கொடுத்தார். அவரும் முப்பதுவருடங்களாகத் தச்சுத்தொழிலிலேயே ஈடுபட்டிருந்தார். அவ்வண்ணம்செய்து தொழிலை அர்ச்சித்து அதைமேன்மைப்படுத்தியுள்ளார். எக்காலத்திலும் தொழிலுக்குமேன்மையுண்டென்ற பாடத்தை உலகத்துக்கு எடுத்துக்காட்டவிரும்பினர்.

தொழிலாளர் தாம் செய்யும்வேலை ஒருசெபம்என்பதை நினைவுகூரவேண்டும். தொழில்புரிவது செபம்செய்வதற்குச் சரிஎன்றஉண்மையை மனத்தில் இருத்தல்வேண்டும். என்னவிதமான வேலையைச்செய்தாலும் இந்தஉல்லநோக்கத்தோடு செய்தால் அதுஒருசெபமேஆகும். என்னவிதமான தொழிலாயிருந்தாலும் அது அவசங்கைக்குரியதாகாது. இந்தஉலகத்திலே மனிதன்செய்யக்கூடிய மிகத்திறமானமுயற்சி செபம்என்றால், தொழில் செபமாகமாறினால், அப்போதுதொழில் மேன்மைஅடைகிறதெனச் சொல்லத்தேவையில்லை.

இந்தக்காலத்திலே இந்தப்பாடத்தை உலகம்படிக்கவேண்டும். தொழிலாளர் தங்கள்வேலைகளைத் தெண்டைக்குத்தேவையாய் மனஉற்சாகமின்றிச் செய்கிறார்கள். ஆனால், கத்தோலிக்கதொழிலாளி தன்தொழிலை விசுவாசக்கண்ணால் தேவபுகழ்ச்சிக்காகச் செய்யப் பயிற்றப்படுகிறான்.

தொழிலாளரின் பாதுகாவலராக அர்ச். சூசையப்பர் தெரியப்பட்டிருக்கிறார். ஏனெனில், அவர் தமது சீவியகாலத்தில் எல்லாத்தொழிலாளிகட்கும் ஓர்மேல்வரிச்சட்டமாகத் தம்மைக்காண்பித்தார். ஒவ்வொருநாளும் கடுமையாகவேலைசெய்து பரிசுத்தகன்னிமரியாயினதும், திவ்வியஇரட்சகரதும் அன்றுடையஜீவனத்தைத்தேடுவது தமதுகடமையென அர்ச். சூசையப்பர் உணர்ந்து அந்தக்கடமையைச் செவ்வனேநிறைவேற்றினர்.

தொழிலாளர் அர்ச். சூசையப்பரின் இந்தநன்முன்மாதிரியைப் பின்பற்றினால் தங்கள்தொழிலில் சந்தோஷமடைவார்கள். அல்லாமலும் தங்கள் உடன்தொழிலாளருக்கும் உற்சாகங்கொடுப்பவர்களாவார்கள்.

குருடர்களின் திருயாத்திரை

குருடர்களுக்கான ஞானப்படையணி 1946-ம் ஆண்டுமுதல் வருடந்தோறும் லூர்துதிருப்பதிக்குக் குருடர்களின்யாத்திரைஒன்றை ஒழுங்குபடுத்தி நடத்திவருகின்றது. இந்தயாத்திரையில் கலந்துகொள்ளும் குருடர்களின்தொகை வருடந்தோறும் அதிகரித்துவருகின்றது. 1946-ம் ஆண்டின்யாத்திரையில் கலந்துகொண்டகுருடர்கள் 350பேர். ஆனால், சென்ற 1957-ம் ஆண்டு நடைபெற்றயாத்திரையில் 1,600 பேருக்குமேல் சேர்ந்துகொண்டார்கள். இவ்வருடயாத்திரையிற்சேர்ந்து சென்றசித்திரை9-ந்திகதியன்று 4,000பேர்வரை அப்பதிபோய்ச் சேரலானார்கள். இவர்களில் 3,000பிரான்சியர்கள் மூன்றுவிசேஷ றெயின்வண்டிகளிலும், 70பெல்ஜியர்கள் வழமையான றெயின்வண்டிகளிலும் அன்றுகாலை அங்குபோய்ச் சேர்ந்தார்கள்.

பாரீஸ் நகரும் புதிய கோவில்களும்

பிரான்சின் தலைப்பட்டணமாகிய பரீஸ்நகரிலே சனத்தொகை தீவிரமாக அதிகரித்துக்கொண்டுவருவதால் ஆன்மாக்களை ஞானவிசாரணைசெய்ய அந்நகரிலே 700 புதியகோவில்கள் தேவைப்படுகின்றன. பரீஸ்நகர்மேற்றிராசனத்திலுள்ள சுமார் 70லட்சம்மக்களுள் மிகப்பெரும்பான்மையினர் கத்தோலிக்கரே. இவர்களின் ஆராதனைவழிபாடுகளுக்கெனத் தற்போது 360கோவில்களே இருந்துவருகின்றன. பரீஸ்நகரின் மத்தியபகுதியானது தற்சமையம் மக்கள்வசிக்கும் பகுதியாயில்லை. சாய்ப்புகளும், காரியாலயங்களுமே அதில்மூக்கியமாகத் தற்போது இடம்பெற்றிருக்கின்றன. அதனால் புறநகரின் பெரும்பகுதிகளை அபிவிர்த்திசெய்யவேண்டியநிலைமை ஏற்பட்டுள்ளது. இவற்றில்அநேகபகுதிகள் கோவில்கள் இல்லாதன. தற்போது பரீஸ்நகரிலுள்ள கோவில்களில்அநேகம் பலநூற்றாண்டுகளுக்குமுன் கட்டப்பட்டனவாகும். இவைகள் புறநகர்ப்பகுதிகளிலிருந்து தூரத்திலுள்ளனவாகும். 1,200முதல் 1,500 குடும்பங்கள்வரை குடியேறிய இப்பகுதிகளில் கடந்தமூன்றுவருடங்களிலும் சனத்தொகை இருமடங்காகியிருக்கிறது.

முத்திப்பேறுபெற்ற பட்டத்திற்கான செபவேண்டுகோள்

ஐந்துலட்சம்சதுரமைல் விஸ்தீரணமுள்ள—அதாவது, இங்கிலாந்தைப்போல் ஏறக்குறையப் பத்துமடங்குபெரியதான மேற்றிராசனம்ஒன்றை நெடுங்காலம் ஆளுகைசெய்த ஓர்மேற்றிராணியார் கூடியவிரைவிலே முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்படுவதற்கான செபவேண்டுகோள்ஒன்றை எட்மொண்ரன்என்ற கனடியமாகாணத்து மேற்றிராணிமார் தங்கள்மேய்ப்பர்நிருபத்தில் விடுத்திருக்கின்றனர். அமலோற்பவமரியநாயகி சபையைச்சேர்ந்த வைற்றல் கிறுன்டின்என்ற இந்தமேற்றிராணியார் தமது 73-ம்வயதிலே 1902-ம் ஆண்டு காலஞ்சென்றார். 9-ம்பத்திநாதபாப்பானவர் இவரை ஓர்துணைமேற்றிராணியாராக நியமனஞ்செய்தபோது, இவர் 29வயதுடையவராகவே இருந்தார். அப்போது இவர் தூரமான இடங்களில் ஞானவிசாரணைச் சுற்றுலாட்டம் நடத்திக்கொண்டிருந்தபடியால் தமதுநியமனம்பற்றியசெய்தியை ஆறுமாதகாலமாக அவர் கேள்விப்படவில்லை.

—(:)—

அதிமேற்றிராணியார் கேட்ட வாக்குறுதி

அன்று வெள்ளிக்கிழமை லிவர்ப்பூல்நகரின் பதில் ஆசனக் கோவிலிலே தங்கள்படிப்பை முடித்துக் கலாசாலைகளை விட்டு வெளியேறவிருந்த 1,400 மாணவர், மாணவிகள் சமூகத்தில் அந்நகர ஹீனன் அதிமேற்றிராணியார் பேசியபோது: "இவ்வார இறுதியில் நீங்கள் கலாசாலையைவிட்டுவிடும்போது, உங்கள்வருங்காலத்தைப் பற்றி ஒரேயொருவாக்குறுதிமாத்திரம் நாம் உங்களுக்கு அளிக்கக்கூடும்; வருங்காலம் முற்றுகவே அறியப்படாததாகும், ஆனால், உலக நடபடியைக்கொண்டு சொல்லுமிடத்து உங்களில் ஒன்று, இரண்டு, அல்லது மூன்றுபேர் 20 வயதுக்குமுன் இறந்துபோவீர்கள்; சிலவேளை 50 பேர் 80வயதுவரை சீவித்திருப்பீர்கள்; சிலர் பலசாலிகளான ஆடவரும், பெண்மணிகளுமாக இருப்பீர்கள்; சிலர் சுகங்கெட்டவர்களாய் இருப்பீர்கள்; சிலர் பெருந்தொகைப் பணம் சம்பாதிப்பீர்கள்; சிலர் சொற்பபணமே சம்பாதிப்பீர்கள்; சிலர் குருமாரும், கன்னியாஸ்திரிமாரும் ஆவீர்கள்; அதிகமானோர் விவாகஞ்செய்துகொள்வீர்கள்; நீங்கள் சுகத்தை இழக்கலாம்; சீவனை இழக்கலாம்; பணத்தை இழக்கலாம்; சிநேகிதர்கள் உங்களைக் கைவிடலாம்; ஆனால், நாம் ஒருகாரியம் உங்களுக்கு உறுதியாகச் சொல்லமுடியும்; அதாவது, உங்களில் ஒருவருமே நீங்கள் கொண்டுள்ள கத்தோலிக்கவேதவிசுவாசத்தை உங்களிடமிருந்து நீக்கிவிடமாட்டீர்கள்; உங்கள் விசுவாசத்தைஇழந்தீர்களோ அதனை அப்பால் உதறி எறிந்துவிட்டவர்கள் ஆவீர்கள்; உங்கள் திருவேதத்துக்குப் பிரமாணிக்கமாய் இருந்துவருவதாக இப்போதே நமது திவ்வியகர்த்தருக்கு வாக்குக் கொடுங்கள்" எனக் கூறினின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்திய வேத
பாதுகாவலன்
1958-ம் ஆண்டு
வைகாசிமாதம் 8-ந் திகதி

அப்போஸ்தலிக்க ஸ்தானுபதி
ஆண்டகை

பரிசுத்த பாப்பரசரின் அப்போஸ்தலிக்கஸ்தானுபதி ஆண்டகையவர்கள் சென்ற 30-ந் திகதி புதன்கிழமை சாயந்தரம் முதன்முறையாக யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்தபோது, யாழ்ப்பாணக் கத்தோலிக்கமக்கள் பாப்பரசரையே கண்டாற் போன்று ஆனந்தபரவசங் கொண்டவர்களாய் மங்கலகரமாக அவரை வரவேற்று நின்ற மனோகரகாட்சியோ பெரிதும் மாட்சியுடைத்தாயிற்று. கிறீஸ்துநாதரின் பதிலாளியாய், உலகமுழுவதும் பரந்திருக்கின்ற கத்தோலிக்கதிருச்சபையின் ஒப்பற்றதலைவராய், அர்ச். பேதுருவானவரின் சிம்மாசனத்தில் வீற்றிருக்கின்ற 12-ம் பத்திநாத பாப்பரசரின் பிரதிநிதியே அவர் என்பதை உணர்ந்துகொண்ட — அவருக்குச்செய்யும் ஆசாரஉபசாரம் வணக்கமரியாதையெல்லாம் பாப்பரசருக்கேஎன்பதை உணர்ந்து கொண்ட மக்கள் அனைவரும் இதயபூர்வமாக, பெரிதும்ஆடம்பரமாக அவரை வரவேற்றுகின்றமை ஆச்சரியமன்று.

யாழ்ப்பாணத்திலே சென்ற வருடமுதல் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுவரும் தொழிலாளியான அர்ச். சூசையப்பரின் திருநாளுக்குமுதலுள் ஓர்மூன்னோடியேபோன்று ஆண்டகைஅவர்கள் யாழ்ப்பாணமவந்ததும், அத்திருநாளில் சிறப்பாகப் பங்குபற்றிக்கொண்டதும் பெருமகிழ்வுடன் வரவேற்கத்தக்கனவாகும். திருநாளன்று வியாழக்கிழமை காலைமணிக்கு அவர் பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே கத்தோலிக்க தொழிலாளர் உறவுச்சமாசத்தின் அங்கத்தவர்களும், கத்தோலிக்கதொழிலாளர்களும், அவர்கள்குடும்பத்தினரும் பெருந்திரளாகக் குழுமியிருந்தசமூகத்தில் திவ்வியபூசை நிறைவேற்றித் தொழிலாளியான அர்ச். சூசையப்பரைப்பற்றியும், தொழிலாளிகளின் மாதிரிகையான அவரைத் தொழிலாளிகள் கண்டுபாவிக்கவேண்டிய அவசியத்தைப்பற்றியும் வடிதங்கம்போன்று அரியதோர்பிரசங்கஞ் செய்யலாயினர். சாயந்தரம் அர்ச். சூசையப்பரின் திருச்சுரூபசுற்றுப்பிரகாரம் நகர்வீதிகளினூடாகப் பெரிதும்பக்திப்பரவசமாக நடைபெற்றுக் கடலனைமைதானத்தில் அமைக்கப்பட்டிருந்தகவின்மிக்க மணிமண்டபத்தைஅடைந்ததும் அங்கே ஸ்தானுபதிஅவர்கள் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம்அருளித் தொழிலாளிகளின் ஆயுதங்களை ஆசீர்வதித்து, பின்னர் கடற்கரைப்பக்கஞ் சென்று கடலையும், அங்கே அலங்காரகோலம் பூண்டுவிளங்கிய தோணிகள், படகுகள், வள்ளங்களையும் ஆசீர்வதித்து அனைவர்மத்தியிலும், சிறப்பாகத் தொழிலாளர்மத்தியிலும் ஓர்மகத்தான நல்லுணர்ச்சியைப் பிறப்பித்துவிட்டமை பாராட்டத்தக்கதாகும்

நிற்க, ஆண்டகை அவர்கள் யாழ்ப்பாணத்தில தங்கியிருந்த போது நடைபெற்ற சரித்திரப் பெருமைவாய்ந்த இருசம்பவங்கள் பொன்னட்சரங்களாலே பொறிக்கப்படத் தக்கனவாகும். அவற்றில்ஒன்று, யாழ்ப்பாண நகரசபை அவருக்கு நகர்வாசிகள்சார்பாக அளித்துள்ள வரவேற்புஉபசாரமாகும். 45கோடி கத்தோலிக்கமக்களின் ஞானத்தலைவராய் விளங்கும் பாப்பரசரின் பிரதிநிதிஒருவருக்கு— திருச்சபையின் குருசிரேஷ்டர் ஒருவருக்கு யாழ்ப்பாணநகரசபை தனதுசரித்திரத்தில் முதன்முறையாக இத்தகைய பேருபசாரம்ஒன்றை நடாத்திவைத்தபெருமை அதன் தற்போதைய மேயரான திரு. பீ. காசிப்பிள்ளை அவர்களுக்கும், சபை அங்கத்தவர்களுக்குமே உரியதென்க.

சரித்திரப் பெருமைவாய்ந்த மறுசம்பவம் யாதெனில், கொழும்புத்துறைத்தாபன மைதானத்திலே புதிய கத்தோலிக்க ஆஸ்பத்திரிக்கு ஆண்டகைஅவர்கள் அத்திவாரக்கல் நாட்டியதேயாகும். கத்தோலிக்க மக்கள் மாத்திரமல்ல, ஏனைய சமயத்தைச்சேர்ந்த மக்களுமே நெடுங்காலம் விருப்புக்காட்டிவந்த கத்தோலிக்கஆஸ்பத்திரிக்கு அத்திவாரக்கல்நாட்டிப்போகும் ஆண்டகை அவர்களின் நாமமும் ஆஸ்பத்திரிஉள்ளவரையிலே நினைவு கூரப்படுமென்று நாம் எடுத்துக் கூறவேண்டியதில்லை.

தொழிலாளியான அர்ச். சூசையப்பரின்திருநாளை யாழ்ப்பாணத்திலே தொழிலாளருடன் சேர்ந்து கொண்டாடிப்போகவந்தார்போன்று — இல்லை, தமது திருநாளை யாழ்ப்பாணத் தொழிலாளரோடுசேர்ந்து போய்க் கொண்டாடுமென்று அவராலேயே அனுப்பப்பெற்று வந்தார் போன்று ஆண்டகைஅவர்கள் வந்தாரோஎன்று எண்ணக்கூடியதாயிருப்பது ஒருபுறமாக, அன்று நம்தொழிலாளியான திருமாதவவளனுர் தம்முடையதச்சுத்தொழில் ஆயுதங்களில்ஒன்றான வாச்சியைத் தோளில்தாங்கிக்கொண்டும், தமது ஆயுதங்கள் அடங்கியகூடையை முதுகின் மீது தாங்கிக்கொண்டும் வறுமை ஒருபுறம் காட்சியளிக்க, தொழிலின்பெருமை மறுபுறங்காட்சியளிக்க, திருவதனத்திலே சாந்தியும், சந்தோஷமும்நிலவ, நம்பட்டணவீதிகளினூடாக ஒட்டோலகமாய்ப் பவனிவரக்கண்டபோது, அவரதுதிருக்கோலங்கண்டு உள்ளங்கசிந்து உருகாததொழிலாளரோ, அடியார்களோ இல்லையென்றேசொல்லலாம்.

விசுவாசம் வித்தாய் விரிந்து கனிந்தால் நிச்சயமாய் விருப்புநிறைவாம்.

●

ஒன்றில் உறுதிஉளதாயின் அவ்வுறுதி பொன்றலையும் போக்கும்பொருள்

சதாசகாயமாதா கோணம்

அதிசய மனமாற்றம்

வண. சுவாமியார் அவர்கட்குத் தாழ்மையாக எழுதுவது:

சதாசகாயமாதாவுக்கு விண்ணப்பங்கள் நான் அனுப்பியதும், புதன்கிழமை நோவீனைகளுக்கு நான்தவறுது சமுகங்கொடுப்பதும் உங்கள் ஞாபகத்திலிருக்குமென நம்புகிறேன். நான் வெகுநாட்களாகக் கேட்ட கோரிக்கையைத் தேவதாயார் தாட்சித்தமானு என்னும் நற்செய்தியை மிக்க சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த எண்ணற்றதுதியைப் பிரசுரிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

வெளிநாட்டில் இருக்கும் எங்கள் மகனிடமிருந்து கனகாலமாக ஒரு தகவலும் நமக்குக் கிடைக்கவில்லை. பெற்றோராகிய எங்களுக்கோ, பெண்சாதி பிள்ளைகளுக்கோ ஒருகடிதமாவது எழுதவில்லை. நான் நோவீன தொடங்கிய 27-ம் திகதிமுதிய அவரிடமிருந்து ஒருகடிதங் கிடைத்திருக்கிறது. அதிலிருந்து சில பாகங்களை இதன்கீழ்த் தருகிறேன்.

"அம்மா! திடீரென என்னில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இது எப்படி நிகழ்ந்ததென்று எனக்குத் தெரியாது. உங்கள்செபத்தின் பலன் என்றே நம்புகிறேன். நேற்றிரவு தேவனின்கரங்கள் என்னைத் தொட்டன. தமது நேசத்தையும், இரக்கத்தையும் முன்னிட்டு அவர் என்இருதயத்தில் புகச்சித்தங்கொண்டார். நான் நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்து நீண்ட ஐந்துவருடங்களின்பின் இன்றுகாலை தான் திவ்வியசற்பிரசாத விருந்தருந்தினேன். ஆண்டவர்எனக்குத் தமது இரக்கத்தைக் காட்டியிருக்கிறார். இன்றுதொடக்கம் நான் அவருக்காகவே சீவிக்கத் தீர்மானித்திருக்கிறேன்.

எனக்கடன்களைத் தீர்ப்பதற்காகப் பிரயாசப்பட்டு உழைப்பேன். அதன்பின் உங்களிடமும், என்குடும்பத்திடமும் வருவேன். கணவனென்றமட்டிலும், பிதாஎன்றமட்டிலும் என்கடமைகளை உணராது, சரியானபாதையை விட்டு அந்தகாரத்தில் சீவித்தேன். நான் கொடுத்துள்ள தொல்லைகளுக்காக மிகவும்வருந்துகிறேன். எனக்குப் பூரணமன்னிப்புக் கொடுக்குமாறு வேண்டுகிறேன். பிழைகளுக்குத் தகுந்த நிவர்த்திசெய்ய ஆயத்தமாயிருக்கிறேன்.

அம்மா! இன்றுதொடக்கம் தேவ ஒத்தாசையோடு தேவனுக்குத் துரோகமான பாவஞ் செய்யேனென்றும், தூயசீவியம் நடத்துவேனென்றும் நம்புகிறேன். இருள் என்னைவிட்டு நீங்கிவிட்டது. சீவியத்தின் நோக்கத்தைத் தெரிந்துகொண்டேன். தேவனுக்குச் சித்தமானால் கூடிய கெதியிலே உங்கள்மத்தியில் இருப்பேன். தயவுசெய்து எனக்காக மன்றாடுங்கள். இதுகாலவரை என்னுடைய இருதயம்பாரமாயும், தனிமையாயும் இருந்தது. இப்போது தேவதாயாரின் உதவியால் ஆனந்தமாயிருக்கிறேன். உங்கள் எல்லோரையும் தேவன் காப்பாற்றுவாராக! — உங்கள்மகன்."

சுவாமி, இந்தஅற்புதமனந்திரும்பு தலையிட்டு நாம்எல்லோரும் அக்களிக்கிறோம். எங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. எங்கள்வேண்டுதல்கள் வீண்போகவில்லை. சதாசகாயமாதாசதாகாலமும் புகழப்படுவாவாக.

(ஸ்ரீமதி மென்டொங்கா ஆங்கிலபத்திரிகையொன்றிற்கு எழுதியனுப்பிய நன்றித்துதியின் தமிழ்ச்சாரம்)

எங்கள் துன்பதுயரங்களில் நாமும் சதாசகாயமாதாவிடம் செல்வோமாக! எங்களுக்கு என்னசலுகை வேண்டுமோ, அது ஞானநன்மை என்றாலுஞ்சரி, உலகநன்மை யென்றாலுஞ்சரி அதைப் பெற்றுத்தரும்படி சதாசகாயமாதாவைப் பக்திவைராக்கியத்துடன் கேட்போமாக! தேவதாயாரின் இரக்கமுள்ளஇருதயம் தன்பிள்ளைகள் கேட்பதைக் கொடுக்காதுவிடமாட்டாது. அவஒருபோதும் எங்கள்வேண்டுதல்களைப் புறக்கணிக்கமாட்டா. நம்பிக்கையுடன் சதாசகாயமாதாவின் நோவீனைகளில் பங்குபற்றி வேண்டியதைக் கேட்டடைவோமாக. எங்களுக்காகத் தேவதாயார் தமதுகரங்களைத் தமது திருச்சுதன்பக்கமாக உயர்த்தி அவருடைய திருஇருதயத்திலிருந்து வழிந்தோடும். வரப்பிரசாதங்களை எங்கள்மேல் பொழிந்தருளச்செய்வார். எங்கள் ஆராதனைகளையும், எங்கள்செபங்களையும், எங்கள் தொழில்துறைகளையும் தமதுதிருக்குமாரனுக்கு எப்போதும் ஒப்புக்கொடுத்தவண்ணம் இருப்பார்.

மேதினமும் தொழிலாளிகளும்

"சிலர் நினைப்பதுபோல மேதினம் சமசமாஜிகளும், கம்யூனிஸ்தர்களும் மட்டுமே கொண்டாடும் ஒருதினமல்ல. உலகின் ஒவ்வொருபாகத்திலுமுள்ள சகலபாட்டாளிமக்களும் கொண்டாடும் ஒருதினமே இதுவாகும்". சிலாபமேற்றிராணியாரான மகாவந். எட்மன்ட் பீரிஸ்ஆண்டவரவர்கள் சிலாபம் செண்மேரிஸ்கல்லூரியில் மேதினத்தன்றுநடைபெற்ற ஒருபொதுக்கூட்டத்துக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பங்குக்குரவர் வண. பி. சி பெர்ணண்டோபிள்ளை சுவாமியவர்களால் இம்மேதினக்கொண்டாட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. மேற்றிராணியாண்டவர் தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது: "ஒருதொழிலாளி தனது உரிமைகளுக்காகப்போராடவேண்டும். அவருடையபோராட்டம் பயனளிக்காமற்போனால்தான் அவர்வேலைநிறுத்தத்தை மேற்கொள்வதில் நியாயமுண்டு. ஆனால், நீதியான சகலவழிகளும் பலனளிக்காமற் போனால்தான் வேலைநிறுத்தத்தை அவர்கடைசி ஆயுதமாக உபயோகிக்கவேண்டும்.

"இன்று நடைபெற்றுவரும் வேலைநிறுத்தங்களே வாழ்க்கைச்செலவு அதிகரிப்பதற்குக் காரணமாகும். வாழ்க்கைச்செலவைக் கீழே கொண்டுவரும்படி கோரவேண்டியது மிகவும் அவசியம். அக்கோரிக்கை சட்டபூர்வமானதும்கூட. ஆனால், அதில் வெற்றிபெறுவதற்கு வேலைநிறுத்தத்தை ஆயுதமாகஉபயோகிப்பது வருந்தத்தக்க ஒருவிஷயமாகும். அதனால் எவருக்கும் ஒருவிதமான பிரயோசனமுமில்லை.

"வேலைநிறுத்தம் கஷ்டங்களை மேலும் அதிகரிக்கச்செய்வதோடுவிரும்பியதற்கு மாறுகவே அதன்விளைவும் ஏற்படுகிறது.

"தொழிலாளிகளின் தேவைகளைக் கவனிக்கவேண்டியது முதலாளிகளின் கடமையாகும். அதுபோலவே, தங்கள் முதலாளிகளுக்கு விசுவாசமாகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண நகரமண்டபத்திலே அப்போஸ்தலிக்க ஸ்தானுபதி

நகரசபை அளித்த பகிரங்க வரவேற்பு உபசாரம்

யாழ்ப்பாணநகரின் சரித்திரத்திலே முதன்முறையாக யாழ்ப்பாணநகரசபை கத்தோலிக்க குருசிரேஷ்டர்ஒருவருக்கு நகர்வாசிகள்போல் சென்றபுதன் கிழமை சாயந்தரம் ஓர்குதூகலமான வரவேற்பு அளிக்கலாயிற்று. பாப்பரசரின் அப்போஸ்தலிக்க ஸ்தானுபதியாகிய மகாமேன்மைதங்கிய ஜேம்ஸ் ஆர். கொக்ஸ்ஆண்டகைஅவர்கள் அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ் செய்தபோது, அவரைப்பரிவாகவும், ஆடம்பரமாகவும் வரவேற்றுஉபசரிப்பதிலே யாழ்ப்பாணக் கத்தோலிக்க சமூகத்துக்குப்பின் யாழ்ப்பாண நகரசபையே முதலாவதுஸ்தானம்வகிக்கும் பெருமையைஅடைவதாயிற்று. அன்றுசாயந்தரம் 5-45மணிக்கு அப்போஸ்தலிக்க ஸ்தானுபதிஅவர்கள் நம்மேற்றிராணியாண்டவர் சமேதராய் நகரமண்டபவாயிலை அடையவே, மேயர் திரு. பி. காசிப்பிள்ளைஅவர்கள் மாலைசூட்டி அவரை உபசாரத்துடன் வரவேற்று, நகரசபைஅங்கத்தவர்களையும், உத்தியோகஸ்தர்களையும் அவருக்கு அறிமுகம்செய்துவைத்தார். அதன்மேல்அவர்கள் ஸ்தானுபதிஆண்டவரை நகரமண்டபத்துள் அழைத்துச்சென்று உயராசனத்தில் அமரச் செய்தனர். அப்போது அழகுற்று விளங்கிய நகரமண்டபத்தில் சாதி சமயபேதமின்றிப் பெருமக்கள்பலரும் பெருந்திரளாகக் குழுமியிருந்து அவருக்குஉபசாரஞ் செய்துநின்றார்கள். பின்பு மேயர் காசிப்பிள்ளைஅவர்கள் ஸ்தானுபதியவர்களுக்குப் படித்துக் கொடுத்த வரவேற்புப்பத்திரத்தின் பொழிப்புவருமாறு:

வரவேற்புப் பத்திரம்

ஆண்டகை அவர்களே!

தமிழ்க்கலாசாரத்தின் உறைவிடமும், பண்டைய தமிழ்இராச்சியத்தின் ஆட்சிப்பீடமுமான சரித்திரப் பெருமைவாய்ந்த யாழ்ப்பாணநகரிலே தங்களைப்பெரிதும் மனப்பூர்வமாகவரவேற்பது யாழ்ப்பாணநகரசபைமேயரும், அங்கத்தவர்களுமான எமக்குச் சந்தோஷமும், உரிமையுமாகும். கத்தோலிக்கதிருச்சபையின் பிரதமதலைவரது பிரதிநிதிஒருவருக்கு இந்நகரசபையின் சரித்திரத்தில் இதுவே முதன்முறையாக வரவேற்புஉபசாரம் அருளத் தற்போதையநகரசபைக்குக் கிடைத்தமை ஓர்நல்ல அதிர்ஷ்டமெனவே கருதுகின்றோம்.

இந்த மகோன்னதபதவிக்குத் தாங்கள்உயர்ந்தது அதிகங்குறுகிய காலத்திலாகும். விசுவாசப்பரப்புதற்சபைக் குருமடத்தில்தாங்கள்காண்பித்தவியக்கத்தகுந்த சாஸ்திரநிறமையானது ரோமாபுரியிலுள்ள சர்வதேசகல்லூரியின் உபஅதிபர்பதவியாகிய உச்சஸ்தானத்தை வகிக்கும்படிசெய்தது. தங்களுக்குண்டான காரியதிறமைகள் விரைவிலே வத்திக்கானின் இராசிய சேவையில் தங்களை இடம்பெறச்செய்தன. ஜப்பானிலுள்ள பாப்பரசரின் ஸ்தானுபத்திய காரியதரிசியாயிருந்து கிழக்குஆபிரிக்காவுக்கு அப்போஸ்தலிக்கஸ்தானுபதியாகத் தெரிந்துகொள்ளப்படலானீர். அங்கிருந்து இந்தியாவுக்குப் பாப்பரசின் ஸ்தானீகரும், இலங்கைக்கு அப்போஸ்தலிக்க ஸ்தானுபதியுமாகத் தாங்கள் வகித்திருக்கும் தற்போதையபதவிக்கு உயர்த்தப்படலானீர். கிழைத்தேசமக்கள் உள்ளத்தைத்திறந்து பேசுவதற்கும், சுயஆட்சி உரிமைக்கும், சுதந்திரத்திற்குமாகப் போராடிக்கொண்டிருக்கும் இந்த வேளையிலே கிழைத்தேச சரித்திரத்திலும், அதன்கலாசாரத்திலும் மிகுந்த சிரத்தையுடையவரான பாப்பரசரின் பிரதிநிதிஒருவரை எம்மத்தியில்கொண்டிருப்பது எம்முடையநல்லதிர்ஷ்டமேயாகும்.

இந்தநகரின் வாழ்க்கையை வளப்படுத்தும்விஷயமாய்க் குருமாரும், விசுவாசிகளுமான இருபாலாரையும் அடக்கியுள்ள கத்தோலிக்கசமூகமானது உதவியுள்ளபங்குத்தானத்தை ஆண்டகைஅவர்களின் கவனத்துக்குக் கொண்டுவராவிடின் அதுஓர்பெருங் குறையாய்முடியும். அருங்கொடைகளாலும், பெரும்ஆற்றல்களாலும் ஆசீர்வதிக்கப்பெற்ற மகாதகைமைவாய்ந்த ஓர்யாழ்ப்பாணமகனுகிய மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகைஅவர்களின் கரங்களிலே தேவபராமரிக்கைவைத்துள்ள தற்போதைய யாழ்ப்பாண மேற்றிராசனபரிபாலனம் ஏனையபல்வேறு சமயங்களைச்சேர்ந்த சமூகங்கள் எல்லாவற்றினதும் நல்லெண்ணத்தையும், ஆதரவையும் பெற்றுள்ளதுஎன்பதை ஈண்டு குறிப்பிடவிரும்புகிறோம். மேலும், சம்பத்திரிசியார்கல்லூரியின் முன்னைநாள்அதிபரும், தற்போது ஆஸ்திரேலியாவில் இருப்பவரும், அச்சமென்பதேஅறியவராத ஓர்ஜரிஷ்மகனுமான வண. ரி. எம். எவ். லோங்சுவாமி அவர்களுக்கு இந்தநகரசபை பெரிதும் கடமைப்பாடுடையதும், அவரைமறக்கமுடியாததுமாகும். அவரின்சிறந்த சேவை கிடையாதிருப்பின் இந்தநகரம் சிறந்த ஓர்தேசியநூல்நிலையத்தை அமைக்கவேண்டுமெனக் கொண்டபெரும் ஆசையைப் பூர்த்திசெய்துகொள்வது சாத்தியமாக இருந்திராது.

ஈற்றில், தாங்கள் எம்மத்தியில் தங்கியிருக்கும் குறுகியகாலத்திலே நமதுமக்களைப்பற்றிய இன்பகரமான ஞாபகங்களைத் தங்களுடன்கொண்டுசெல்லுவீர்கள்என்பதில் சந்தேகமில்லை. தங்களுக்குச் சகலவித ஆசீர்வாதங்களும் கிடைக்கவேண்டுமென ஆசித்துமுடிக்கின்றோம்.

ஆண்டகை அவர்களின் பதில்

கனம். மேயர்அவர்கட்கு வணக்கம்!

சரித்திரப்பெருமைவாய்ந்த இந்தநகரத்தில் நாம் இன்றுஇருப்பதும், நீங்கள்எல்லோரும் நம்மை வரவேற்பதும் நமக்குப் பெரும் மனமகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. பரிசுத்தபாப்பரசரின் ஸ்தானுபதிஎன்றமட்டிலே நீங்கள் எமக்குக்காட்டும் சங்கைமரியாதை எமக்கல்ல, பரிசுத்தபிதாவுக்கே காட்டுகிறீர்களென்றே நாம் உணருகிறோம். இங்கே கத்தோலிக்கருக்கும், கத்தோலிக்கரல்லாதவர்களுக்கும் இடையே காணப்படும் கல்லுறவும், ஒற்றுமையும் நமக்கு மிக்க சந்தோஷத்தைக் கொடுக்கின்றன. நல்லதும், மேன்மையுமான எந்தக்கலாசாரத்தையும் வளர்க்கும்இயக்கத்தில் கத்தோலிக்கதிருச்சபை எப்போதும்உற்சாகங்கொடுத்துள்ளது. எப்போதும் கொடுக்கத்தயங்காது. நீங்கள் எமக்குஅளித்துள்ள இந்தஉத்தியோகமுறையான வரவேற்புக்காக எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

யாழ்ப்பாணக் கத்தோலிக்கரும் மேதினக் கொண்டாட்டமும்

தொழிலாளரின்தினமாகிய மேதினம் இவ்வருடம் யாழ்ப்பாணக் கத்தோலிக்கதொழிலாளர்களால் முன்னிலும் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கத்தோலிக்கமக்கள் பலரும் இக்கொண்டாட்டத்தில் கலந்துகொண்டார்கள். அன்றுகாலை யாழ்ப்பாணத்திலுள்ள பல்வேறுஇடங்களிலிருந்தும் தொழிலாளிகள் பெருந்திரளாக ஆசனக்கோவிலில்வந்து ஒன்றுகூடினார்கள்.

காலை7மணிக்குப் பரிசுத்தபாப்பரசரின் ஸ்தானுபதிஆண்டவர் அவர்கள் திவ்வியபூசைப்பலி நிறைவேற்றினார். தொழிலாளரின் பிரதிநிதிகளும், மற்றும்கத்தோலிக்கமக்களும் அப்பலி பூசைகண்டு திருவிருந்தருந்தினர். அத்தருணம் ஆண்டகைஅவர்கள் செய்தஅரியபிரசங்கத்தின் பொழிப்பு வருமாறு: இன்று தொழிலாளரின் பாதுகாவலராகிய அர்ச். சூசையப்பரின் திருநாளைக்கொண்டாடுகிறீர்கள். இவர் இராசவம்சத்தைச் சேர்ந்தவராயினும் ஒருசிற்றூரில் தச்சுத்தொழில் செய்துவந்தார். இவர் தமதுதொழிலைத் தாழ்மை, பொறுமை, அமைச்சல்,பிறர்சிநேகத்துடன்செய்ததாமும், தமதுஅயலாரும் சீராய்ச்சிறப்பாய்க் கடவுட்பக்தராய்ச் சிறந்தசீவியம் நடாத்தப் பணியாற்றிவந்தார். இவரைச் சர்வேசுரன் தமது திருக்குமாரனையும், அவர்திருத்தாயாரையும் நடாத்தும்தலைவனுக நியமிக்கச்சித்தமானார். இதனால், தொழிலின்மேன்மையை உலகுக்குக் காண்பித்தார். மேலும், அர்ச். சூசையப்பர் நீதிமான்என அழைக்கப்படுகிறார். அவரவருக்குஉரியதை அவரவருக்குக்கொடுப்பதே நீதிமுறை. திருச்சபை கிறீஸ்துநாதர்தொடக்கம் அப்போஸ்தலர், பாப்புமார்ஈறுகச் சகலரும் இப்படிப்பணியையே மேற்கொண்டு தொழிலாளரும், முதலாளிகளோரும் அன்பியோன்னியமுறையுடன் ஒன்றுசேர்ந்து தொழிலைச் சிறப்பாகநடத்தி வருமானத்தை ஒருவர்ஒருவரைவஞ்சியாது பங்கிட்டுச் சீவிக்கும்படி வற்புறுத்திவருகின்றது. இதுவே கிறீஸ்துவதொழிலாளரின் முறை. இம்முறையை நீங்கள்கைக்கொண்டு உங்களுக்கும், பிறர்க்கும் நன்மையாக நடந்துகொள்ள வேண்டுமென ஆசித்து உங்களை ஆசீர்வதிக்கிறோம் என்பதே.

பூசையின்பின் சம்பத்திரிசியார் கல்லூரிமண்டபத்திலே யாழ்ப்பாணத்தின் பல்வேறுதொழிற்சமூகங்களைச் சேர்ந்தமக்கள்தம்முள்உயர்வுதாழ்வின்றி அளவளாவினர். எல்லோரும் ஒருதாயின்மக்களைப்போன்று ஒருபந்தி போசனஞ்செய்த கண்கொள்ளாக் காட்சியானது ஆதிக்கிறீஸ்தவர்கள் தம்முள்சிவித்த அன்பியோன்னிய முறையை நன்குஎடுத்துக்காட்டியது. அதன்பின் பரிமேலர் எஸ். அருளானந்தம் அவர்களின் தலைமையிலும், பிற்பகல் பரிமேலர் டக்ளர் செனஜோன் புவிராசசிங்கம் அவர்களின் தலைமையிலும் சம்பாஷணைகள் நடைபெற்றன. "தொழிலாளர்களின் குணதிசயங்கள்," "கத்தோலிக்க தொழிலாளர் இயக்கம்," "தொழிலின்மூலம் தொழிலாளன் தன்னைஅர்ச்சிப்பது," "தொழிலாளனும்கத்தோலிக்கசேவையும்" எனும் விடையங்களைக்குறித்துச் சிற்றுரைகள் நிகழ்த்தப்பட்டன. செபம், உழைப்பு, தியாகம் இவற்றின் வழியாகக் கிறீஸ்துவன்பெற்றயேசுவை உலகிலுள்ள சகலருக்கும் கொடுக்கும்இயக்கமே கத்தோலிக்கசேவைஎன்பது விளக்கிக்காட்டப்பட்டது.

தொழிலாளன் தன்சீவியத்தைக் கிறீஸ்துவமுறையில் நடத்துவதோடுமாத்திரம் நின்றுவிடக்கூடாது; உலகம் நூற்றுக்கு 80 விகிதம் தொழிலாளர்களையே கொண்டிருக்கிறது; வாழ்க்கைச்செலவு அதிகரிக்கிறது; வருமானம்குறைகிறது; ஆனதினுல் தொழிலாளரிடையே அமைதியீனம் ஓங்குகிறது; இதைச்சிலர் சுயநலவேட்டையில் புகுந்து புரட்சிகள்உண்டாக்கி உலகசமாதானத்தைக் கெடுத்து காஸ்திகத்தைப் பரப்பப்பார்க்கும் சமயம் இது; இது தொழிலாளர்யுகம்; ஆனபடியால் பேதுருவானவரின் படகில் இருக்கும்யேசுவைத்தொழிலாளர்உலகத்திலே புகுத்தவேண்டும்; அவரே இப்புயலையும், காற்றையும் அமர்த்தி உலகத்திற்கு வெளிச்சத்தையும், சமாதானசாந்தியையும் அளிப்பவர் என்று தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டது. இந்தநோக்கமாகவே அங்கு கூடியிருந்தவர்களெல்லாம் தங்கள்வேலைத்தலங்களிலும், கிராமங்களிலும், தொழில்செய்யுமிடங்களிலும், தொழிலாளர் கிளைச்சங்கங்களை கூட்டுறவுமுயற்சியாய்ஆக்கித் தொழிலாளர்சமுதாயம் முழுவதையும் கிறீஸ்துமயமாக்கி ஒத்துழைப்பினுலே இகலோக பரலோக நல்வாழ்வுக்கு அடிகோலு

(தொடர்ச்சி 8-ம்பக்கம்)

சேவைசெய்யவேண்டியது தொழிலாளிகளின் கடமையாகவு மிருக்கிறது. வேலைநிறுத்தங்கள் ஒரு அரசாங்கத்தின் நிர்வாகஇயந்திரத்தையும், நிர்வாகத்தையும் சீர்குலைக்கும்போது தொல்லைகளுக்குள்ளான அவ்வரசாங்கம்எப்படிவாழ்க்கைச்செலவைக் கீழே கொண்டுவரமுடியும்?"

உங்களிடையே நிலவும் இந்தப் பரஸ்பரஅன்பு இன்னுமவளர்ந்து அதிகம்பலனைக் கொடுக்குமென நம்புகின்றோம். இப்பட்டணத்தின் நன்மைக்காகவும், அதன்வளர்ச்சிக்காகவும் கத்தோலிக்கருமாரும், சாதாரணகத்தோலிக்கரும் அதிகாரிகளோடு ஒத்துழைக்கக்காண்பது நமக்கு உண்மையாகவே எவ்வளவோ ஆறுதலைக்கொடுக்கின்றது. சட்டபூர்வமான எல்லாஅதிகாரமும் தேவனிடமிருந்துவருகிறது. ஆகவே, கத்தோலிக்கமக்கள் சனசமூகத்தின் நன்மைக்கான ஆக்கமுயற்சிகளில் தங்களாலான உதவிபுரிவார்களென நீங்கள் எப்போதும் நம்பியிருக்கலாம்.

உங்கள்மத்தியில் நாம்சொற்பகாலம் தான் தங்கியிருந்தாலும் உங்கள்அன்பை நாம் மறக்கமுடியாது. நீங்கள் நமக்குக்காட்டியுள்ள சங்கைமரியாதை, அபரிமிதமானஅன்பு, நல்வாழ்த்துகள் முதலியவற்றை நாம்ரோமாபுரிக்குப்போகும்போது பரிசுத்தபாப்பரசருக்குச் சமர்ப்பிப்போம்.

கனம். மேயர்அவர்கட்கும், மற்றும் நகரசபை அங்கத்தவர்கள் சகலருக்கும் இந்தஅன்பான வரவேற்புக்காக நமதுநன்றியை மீண்டுந்தெரிவித்துக் கொள்ளுகிறோம்.—ஈற்றில்,சம்பிரமமான சிற்றுண்டி உபசரணையுடன் நகரசபையின் வரவேற்புவிழா நிறைவாயிற்று.

அப்போஸ்தலிக்க ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நீர்கள். நாமெல்லாம்ஒரே தேவபிதாவின் பிள்ளைகள். நாம்முந்தச் சர்வேசுரனை நேசிக்கவேண்டும். இரண்டாவதாகப் பிறத்தியாரை நேசிக்கவேண்டும். இந்த இரண்டு கற்பனைகளும் திருச்சபையின் இரண்டு தூண்கள். இன்று பாப்பரசர் உலகசமாதானத்தை நிலைநாட்டுவதற்கு இந்தப் பிறர்சிநேகத்தையேயன்றி வேறெதையும் கேட்கவில்லை. பிறர்சிநேகமே உலகசமாதானத்தின் திறவுகோலாக விளங்குகின்றது.

அதன்மேல் அவர் சகலருக்கும் பரிசுத்தபாப்பரசரின் அப்போஸ்தலிக்க ஆசீர்வாதம் அருளியதுடன் ஆசனக்கோவில்வரவேற்புவிழா நிறைவாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிதாவே! நீர் விரும்பிக் கேட்ட ஆத்துமம்...

ஸ்பானிய தேசத்தில் உள்நாட்டு யுத்தம் மும்முரமாக நடந்துகொண்டிருந்தது. ஒருபக்கத்தில் தேசீய கட்சியாரும் மறுபக்கத்தில் செஞ்சேனையாளரும் சமர்புரிந்தார்கள். தேசியகட்சியாளர் கிறீஸ்துவதர்மக் கொள்கைகளை நிலைநாட்டக் கங்கணங் கட்டி நிற்கின்றார்கள். செஞ்சேனையாளர், நாஸ்திகப் பொதுவுடமைக் கொள்கைகளைப் பரவச்செய்ய முயன்றுவந்தார்கள். மெய்யான நாகரீகத்தையும், அதற்கு அடிப்படையாகவிருந்த கிறீஸ்துவேதத்தையுமே தொலைத்து விடுவதாக இவர்கள் சபதங் கூறிநின்றார்கள். கோவில்களை இடித்துத் தகர்த்தார்கள். பல்லாயிரம் குருமாரைக் கொலைசெய்தார்கள். அவர்கள் கையிலகப்பட்டுமாண்ட கன்னியர்கள் அநந்தம். தளராத விசுவாசத்திற்காக உயிரிழந்த கிறீஸ்தவர்களின் தொகையோ ஏராளம். இப்படி மரணமடைந்த குருப் பிரசாதிகளில் ஒருவர் லாத் எனுஞ் சிரேஷ்டசுவாமியார்.

வண. லாத் சுவாமியார் புத்தியில் சிறந்தவர். பக்தியில் முதிர்ந்தவர். ஆத்தும இரட்சணிய அலுவலில் தணியாத ஆவல்கொண்டவர். மாணிடர் நல்வழிச்செல்ல அமிர்த பிரசங்கங்கள் பண்ணிவந்தார். பொதுத்தியானங்களும், உள்தியானங்களும் கொடுப்பதில் பேர்பெற்றிருந்தார். சனங்களுக்கு இவர்மாட்டுப் பற்றுதலும், மரியாதையும் அபரிமிதமாயிருந்தன. அவரது வார்த்தைகளை அவர்களும் மறுக்காது கேட்டுநடந்தார்கள். கத்தோலிக்கர் அவர்மீது அளவிலாப்பட்சம் வைத்திருந்தமையால் அவரைத் தொலைத்துவிட வேண்டுமென்று தீர்மானித்தார்கள் நாஸ்திகர். ஸ்பானிய யுத்தம் ஆரம்பமாகி வெகுநாளாகவில்லை. ஒருநாள் செஞ்சேனையைச் சேர்ந்த சிலர் வண. லாத் சுவாமியாரிடம்போய் அவரை வெளியே இழுத்துவந்து அவரைக் கொலைசெய்ய முயற்சித்தார்கள்.

வயோதிகதேசிகர் தாம் கொலைக்குள்ளாகப் போவதையறிந்து புன்முறுவலுற்று மனந்திருப்தியாயும், சந்தோஷமாயும் யேசுவுக்காகத் தம துயிரைப் பலியாகக் கொடுக்கத் தயாராயிருப்பதாகக் காட்டினார். இதைக்கண்ட கொலைஞர்கள் ஆச்சரியமுற்றனர். அசைவின்றி நின்றனர். அவர்களில் ஒருவன் "என்ன! சாகப் போகிறது உமக்குப் பயத்தை மூட்டவில்லையோ?" என வினவினன். "பரிச்சேதமில்லை, இப்பேர்ப்பட்ட மரணத்திற்காகவே யான் என்றும் மன்றாடிவந்தேன்" எனப்பதிலிறுத்தார் சுவாமியார். இதைக்கேட்டு அவர்கள் இன்னுமதிகமாக ஆச்சரியப்பட்டார்கள். கொலைஞர்கள் ஆச்சரியமுறுவதைக்கண்ட குருவானவர், தமது கருத்தை விபரமாகத் தெரிவிக்குமாறு கொஞ்சநேரங் கொடுக்கும்படிகேட்க, அதற்குஅவர்களுஞ் சம்மதித்தனர்.

"என்சீவியகாலமுழுவதும் மூன்று காரியங்களுக்காக மன்றாடிவந்தேன். அவைகளில்ஒன்று எனது ஆத்தும இரட்சணியம். அதுவே மனிதனின் முதன்மையானஅலுவல். இப்போது நான் யேசுவுக்காக உயிரைக் கொடுக்கப்போவதால் என்இரட்சணியம் நிச்சயமாயிற்று. மோட்சகபாடம் எனக்குமுன் திறக்கப்படுமென்பதில் கிஞ்சித்தேனும் சந்தேகமில்லை" யெனப்பகர்ந்தார் குருவானவர். "நான் கடவுளிடம் இரந்துகேட்ட இரண்டாவதுமன்றாட்டு என்னவென்றால், நான் யேசுவுக்காக வேதசாட்சியாக என்னுயிரைத் தானஞ்செய்யவேண்டுமென்பதே. அத்தகையமரணமே நான் அண்மையில் அடையப்போவதாகத் தெரிகிறது. ஏனெனில், நான் ஒரு குருவாகவிருந்து யேசுவுக்காக உழைத்துவருவதினால், என்னை நீங்கள் கொலைசெய்யப்போவதாக உங்களுடைய பேச்சிலிருந்து தெரியக்கிடக்கின்றது. ஆகையால் நான் கேட்ட இரண்டாவது மன்றாட்டும் பலித்துவிடும்" என்று தொடர்ந்து சொனனர்.

"நான் கேட்ட மூன்றாவது மன்றாட்டு எனக்குக் கிடைக்குமோ வென்று உறுதியாகச்சொல்ல எனக்குத்துணிவில்லை. ஆயினும், கடவுள் கருணையுள்ளவர். அவரையே நம்பியுள்ளேன். என்மரணத்தால் ஓர்ஆத்துமம் இரட்சிக்கப்படவேண்டும், அது நரகத்தினின்று தப்பித்து மோட்சஞ்சேர வேண்டுமென்பதே எனது மூன்றாவது மன்றாட்டு. என்னைச்சுட்டுக்கொல்ல நீங்கள் தயாராயிருக்கிறீர்கள். உங்கள் எல்லோரையும் கடவுள்போல் முழுமனதுடன் மன்னிக்கிறேன். உங்களில் யாராகிலுமொருவன் கடவுளாலே தெரிந்துகொள்ளப்படுவானுகில்—அவன் மனந்திரும்புதலுக்கு என்னுயிர் பிரயோசனமாயிருக்குமானால் எனக்கு அளவுகடந்ததிருப்தி அதுவேயாகும்" எனக்கூறி எதிரேநிற்கும் வீரர் ஒவ்வொருவரையும் புன்முறுவலுடனும், கசிந்தமனதோடும் உற்றுப் பார்த்தார்.

அப்போது, வீரர்களில் ஒருவன் குருவானவரின் புன்முறுவலால் அருட்டப்பட்டு அவரை நோக்கினன். இருவர் நேத்திரங்களுஞ் சந்தித்தன. அவன் உடனே கையிலிருந்த துப்பாக்கியைக் கீழேபோட்டுவிட்டுக் குருவானவரை அணுகினன். முழந்தாட்படியிட்டான். அவரது அர்ச்சிக்கப்பட்ட கரங்களை முத்தமிட்டான். "பிதாவே! நீர்விரும்பிக் கேட்ட ஆத்துமம் நானே வென். கடவுள் உமது மன்றாட்டைக் கேட்டருளினார். என்பாவத்திற்காக மனஸ்தாபப்படுகிறேன். என்பேரில் இரக்கமாயிரும். இதோ! உம்மோடுகூட யேசுவுக்காக என்னுயிரையும் துறக்கச்சித்தமாயிருக்கின்றேன்" என்று கண்ணீர்ததும்பஉரைத்து எழுந்து குருவானவர்அருகில் நின்றான். முன்னர் தன்தோழர்களும், இப்போது தன்கொலைஞர்களுமாகிய செஞ்சேனை வீரர்களை ஏறெடுத்துப் பார்த்தான். குருவும் சீஷனும் தேவனை மன்றாடினார்கள். வீரர்தலைவன் இருவரையுஞ்சுடும்படி ஏவினன். டப் டப் எனக்குண்டுகள் வெளிப்பாய்ந்தன. புன்னகையூத்த தேசிகரும், மனஸ்தாபப்பட்டநாஸ்திகனும் ஒருவரைஒருவர் பிடித்தவண்ணம் தரையிலே குப்புறவீழ்ந்தார்கள். அவர்களின் ஆத்துமங்கள் பாக்கியமாகத் தேவபதஞ்சென்றன.

● சுதந்திர மேற்கு ஜேர்மனியின் பிரதமரான டக்டர் அடனௌவர்அவர்களின் புதல்வரான டக்டர் மாக்ஸ் அடனௌவர்அவர்கள் பரிசுத்தபாப்பரசராலே அர்ச். பெரிய கிறகோரியாரின் நைற்பட்டம் சம்மானிக்கப்பெற்றிருக்கின்றார்.

● 1930-ம் ஆண்டுக்குப்பின் முதன்முதலாக இப்போது ஜேர்மனியிலே ஓர் புதியமேற்றிராசனம் வகுக்கப்பட்டுள்ளது. இது எசென்நகர் மேற்றிராசனமாகும். இதன் முதல் மேற்றிராணியாராக வண. பிரான்ஸ் ஹெங்ஸ்பாச்சுவாமியார் அபிஷேகஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். எசென்மேற்றிராசனத்திலே பேரான றார்கைத்தொழில் பகுதியும் அடங்கியுள்ளது.

புதுமையைச் செய்கிறார்

கலியாணவீட்டில் எதிர்பாராத விதமாய்த் திராட்சரசம் குறைவுபட்டது. கலியாண வீட்டாருக்கும், விசேஷமாய் மணமக்களுக்கும் பெரும் அவமானத்தை உண்டுபண்ணும் சம்பவம் இது. அவர்களுடைய சஞ்சலத்தை அறிந்த மாதா அவர்களுக்கு உதவியாகவருகிறார். அவரிடம் ஒருவரும்போய்ச் சொல்லவில்லை. அவர்தானே அவர்களுடைய சங்கடங்களை அறிந்திருந்தார். ஆகையினால், அவர்கள் கேட்காதபடியே தமதுமகனிடம் பரிந்து பேசுகிறார். தமது மகனிடம் அவர்களின் குறையைச் சொல்லி அதை நிவிர்த்திசெய்யக் கேட்கிறார். பிறர்நேசத்தின் சிறந்த முன்மாதிரிகை. நாம் நம்மைச் சுற்றியிருப்போரைச் நேசிக்கிறோமா? சிலவேளை நேசிப்பதாக மனப்பால் குடித்துக் கொண்டிருக்கலாம். ஆனால், மெய்யாகவே நாம் பிறரைச் நேசிப்போமானால் நமது கிரியையினால் பட்டவர்த்தனமாய்க் காட்டுவோம். அவர்கள் துன்பவேளையில் கஷ்டப்படாமல் நாம் உதவிசெய்யக் கூடுமாயிருந்தும் அந்த உதவியைச் செய்யாவிட்டால் நாம் அவர்களைச் நேசிக்கிறோம்என்று சொல்லக்கூடுமா?

தேவதாய் நம்மீது எவ்வளவு கரிசனை கொண்டிருக்கிறார் என்பதைக் காட்டுவதற்கு இது ஓர் உதாரணமாகும். கேட்காதிருக்கும்போது இவ்வளவு பேருதவி செய்தார். நம்பிக்கையுடன் அவரை அண்டிப் போவாரின் மன்றாட்டைக் கேட்காதிருப்பாரா? இதனால்தான் அர்ச். பெர்நார்து "மிகவும் இரக்கமுள்ளதாயே! உமது அடைக்கலமாக ஓடிவந்து, உம்முடைய சகாயங்களை இரந்து, உம்முடைய மன்றாட்டுக்களின் உதவியைக்கேட்ட ஒருவனுகிலும் உம்மால்கைவிடப்பட்டதாக ஒருபோதும் உலகில் சொல்லக் கேள்விப்பட்டதில்லையென்று நினைத்தருளும்" என்று சொல்லியிருக்கிறார். இனிமேலென்கிலும் அவருடைய ஒத்தாசையை உயிருள்ள விசுவாசத்துடன் கேட்கவேண்டும். விசேஷமாய் நமது ஆத்தும இரட்சணியத்துக்கடுத்த காரியங்களில் அவருடையஉதவி நமக்கு அத்தியாவசியம். அவர் நமதுதாயல்லவா? மோட்சகரை சேருவதற்கு அவருடைய கரங்களைப்பற்றிப் பின்செல்லவேண்டும். சகல வரப்பிரசாதங்களும் அவர் வழியாய் நமக்குக் கொடுக்கப்படுவதினால் அவருடையதஞ்சத்தை நாம் கெஞ்சிமன்றாடவேண்டும்.

"யேசுவும் தமதுதாயின்விருப்பத்தைப் பூர்த்திசெய்கிறார்; அப்புதுமையைச் செய்கிறார்; அவர் அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்கிறார்; அவர் தமது தாயின்விருப்புக்குச் செவிசாய்க்கிறார்"என்று உலகம் அறியும்படியாக இப் புதுமையைச் செய்தார். மாதாவின்வழியாய் நாம்கேட்டவற்றை அடையலாம்என்றநம்பிக்கைக்கு இது ஏற்றவோர் உற்சாகமாகும். மேலும் நாமும்நமதுபிதாமாதாக்களைக் கனம்பண்ணவேண்டுமென்று ஆண்டவர் இதில்காட்டுகிறார். நமது படிப்பினாலே, செல்வாக்கினாலே அவர்களைவிட உயர்ந்தபதவியில் இருந்தபோதிலும் அவர்களுக்கு எப்பொழுதும் சங்கைசெய்து கீழ்ப்படியவேண்டும். மனிதன் சுயேச்சையாய் நடக்கப் பிரியப்படும் இக்காலத்தில் கீழ்ப்படிவதென்றால் வெகு கசப்பாயிருக்கும். கீழ்ப்படிவதென்றால் சிலருக்கு விபரீதமாகவும் தோன்றும். இவ்விதநோக்கம்நமதுகாலத்துசமுதாயத்திற்கு ஓர்சாபமென்று சொல்லவேண்டும். கீழ்ப்படியாத பிள்ளைகளினால் எத்தனைகுடும்பங்கள் கெட்டுநாசமாய்ப் போயிருக்கின்றன. எத்தனைபெற்றோர்கள் கீழ்ப்படியாத பிள்ளைகளின் நடத்தையினால் பிறர்முன் தலைகுனிய நேரிடுகிறது.

யேசுசெய்த புதுமையின் காரணமாக "அவருடைய சீஷர்கள் அவர்மேல் விசுவாசம் வைத்தார்கள்." நாம் செய்யும் கிரியைகளும் பிறருக்கு நன்மையாயிருக்கவேண்டும். நம்முடைய கீர்த்திக்கும், பெருமைக்குமாக அவற்றைச் செய்யாமல் மற்றவர்களுடைய ஆத்தும இரட்சணியத்திற்காகச் செய்யவேண்டும். நம்மைச் சுற்றியுள்ளவர்கள் நம்முடைய கிரியைகளைக் கண்டு கடவுளை வாழ்த்தவேண்டும். இதுபற்றியே ஆண்டவர் "மனிதர் உங்கள் நற்கிரிகைகளைக் கண்டு பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்பொருட்டு, உங்கள்ஒளி அவர்களுக்கு முன்பாகப் பிரகாசிக்கக் கடவது" என்று சொல்லியிருக்கிறார்.

சத்தியவேத பாதுகாவலன்

இலங்கையிலே வெளிவரும்
ஒரேயொரு கத்தோலிக்க தமிழ் வாரப்பத்திரிகை.
கத்தோலிக்கரை மாத்திரமல்ல, மறுசமயத்தினரையுமே
சந்தாதாரராகக் கொண்டது.
தனது நாமத்துக்கிணங்கக் கத்தோலிக்க சமயத்துக்கு
ஓர் பாதுகாவலனாக விளங்குவது.
சமய விஷயங்களை மட்டுமல்ல,
சமூக, அரசியல், பொருளாதார, உலகவிஷயங்களையும்
எடுத்துக் கூறுவது.
புனிதவீரர் பக்கத்தையும் சிறப்பாகக் கொண்டுள்ளது.

வருட சந்தா:

இலங்கை, இந்தியா ரூபா 5-50 வெளிநாடுகள் ரூபா 6-00

தனிப்பிரதி சதம் 10

மனேஜர்,
சஞ்சுசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதவீரர் பக்கம்

யேசுவில் எமக்கு மிகவும் பிரியமுள்ள பிள்ளைகளே!

நாம் எமது தேவஅன்னையை வந்தித்துச் சங்கிக்கவேண்டிய மாதம் இவ்வைகாசிமாதம். ஆலயங்களில் எல்லாம் அன்னைக்குப் பீடம்அமைத்து, பலவித பசியமலர்களால் சிங்காரித்து, விளக்கேற்றி, விண்ணே மண்ணிற் தோன்றினற்போல விளங்கும்.

நாள்தோறும் தேவதாயாரின் வாழ்க்கையின் உத்தமகுணங்களைத் தியானித்து அவைகளைப் பின்பற்றி நடக்கமுயலுவீர்கள். இவை எல்லாவற்றிற்கும் காரணம் இருக்கவேண்டும்.

மரியம்மாளின் மகன் யேசுக்கிறீஸ்து. யேசுநாதர் உண்மைக் கடவுள்; உண்மை மனிதனுங்கூட. எனவே, கன்னிகையான மரியாய் யேசுவின் மனித சுபாவத்துக்கு மாமிசத்தை அளித்தபடியால் பரம திரித்துவத்தின் இரண்டாம்ஆளின் தாயும் ஆகினாள்.

நாம் கடவுளின் மக்கள். எமது சிருட்டிகரைத் "தந்தை"என அழைக்கும்படி கிறீஸ்துதாமே கற்பித்தார்என வேதாகமத்தில் அறிகிறோம். அதே ஆகமம் எம்மைத் "தேவமக்கள்" எனக் கூறுகிறது. மரியாய் கன்னிகை எனவுங் கூறுகிறது. மரியாயைத் தமது மாதாவாக்கியபொழுது கடவுள் அவரை எங்கள்அன்னையெனவும் ஆக்கினர். நாம் எல்லோரும் அவளுடைய மக்கள். நாம் யேசுவின் ஞானஉடலின் அவயவங்களா யிருப்பதுபோல மரியன்னையின் மக்களாகவு மிருக்கிறோம்.

நாம் ஏழைகளாயிருக்கலாம், துன்பப்படுகிறவர்களாயிருக்கலாம்; ஆயினும் நாம் அவருடைய பிள்ளைகள். மரியன்னையின் தஞ்சத்தைத் தேட வேண்டியவர்கள்.

ஆகவேதான் இந்தவைகாசி மாதத்தில் மரியன்னையிடம் நாம் செல்ல வேண்டும். துன்புறும் மனதைத் தேற்றுவாள்; பாவப்பாரத்தால் வாடுவோரை ஆதரிப்பாள்.

தாயின்இருதயம் உடையவளாகையால் மாமரியை நாம் அண்டிச்செல்கிறோம். எவர்தான் எம்மை ஆதரியாவிட்டாலும் அன்னைமரி கைநெகிழமாட்டாள். ஏனெனில், அவளுடைய "உபகாரசகாயங்களை உதவியைத் தேடின ஒருவராகிலும் உலகினிற் கைவிடப்படவில்லை"

இம்மாதத்தில் எம்நாட்டுக்காகவும் திருச்சபை வளர்ச்சிக்காகவும் சிறப்பாய் எமதுமேற்றிராசனத்தில் தேவஅழைத்தல் பெருகவும் வேண்டிக்கொள்ளுங்கள்.

அன்னையின் ஆதரவில் நீங்கள் தேவநேசத்திலும் திருச்சபைப்பற்றிலும் வளர்ந்துவரவேண்டுகிறோம்.

கிறீஸ்துவிலும் அமலோற்பவ மரியாயிலும்
உங்களன்புள்ள,
✠ ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O. M. I.
யாழ்ப்பாண மேற்றிராணியார்.

—*—

சுவிசேஷ விளக்கம் — 8.

உள்ளத்தை மூடாதே

வானெலி "அப்பா எல்லாம் அறிவார்" என்றபாட்டைப் பாடிக் கொண்டிருந்தது. அப்பொழுது மாலை ஆறுமணிஇருக்கும். சற்று நேரம் வானெலி தழுதழுத்தகுரல் காட்டியது; பின் ஊமையாகிவிட்டது.

அமிர்தநாதர் குடும்பத்தாரின் முகங்கள் ஒளிஇழந்தன. "வால்விலே (Valve) பிழையோ தெரியவில்லை. அப்படியாகக் கூடாது" என்றார் அமிர்தநாதர்.

இதுதான்தக்கதருணமெனச் சௌந்தரிக்குத் தோன்றியது. பழம்நழுவிப் பாலில்விழுந்ததுபோல் என்றுஎண்ணினாள். "அப்பா, நான் சென்றகிழமை சாந்திவீட்டிற்குப் போனேன். அவர்கள் ஒருபுது H. M. V. றேடியோ வாங்கியிருக்கிறார்கள்; ஏழு வால்வாம் (Valve). இவ்வளவு இனிமையான தொனி. அதிலே இசைத்தட்டும் போடலாமப்பா. நாங்கள் அப்படி ஒன்று..." என்று குரலைத் தாழ்த்தினாள்.

"புதிய வானெலி வாங்கவா?" எனக்கேட்டார் அமிர்தநாதர். "மோகன், நீர் என்ன நினைக்கிறீர்? இந்த வானெலிப்பெட்டிவாங்கி ஆண்டுகள்ஐந்துஆகிவிட்டன. சாந்திவீட்டிலே உள்ளதுதான் அசல்வானெலி."

"உங்கள் அம்மா என்னவாம்?" [illegible]ர் அமிர்தநாதர். "என்ன [illegible]லுகிறீர்கள்?" என்று மோகனுடையதாய் பொன்றேஸ் சிரித்தாள். "அப்பா எல்லாம் அறிவார் சீட்டுப்போட்டகாசு ரூபா 600 அடுத்தகிழமை கிடைக்கும். புதிதாய் ஒன்றுவாங்கலாம்" என்றாள்.

"வாங்கலாந்தான்" என்றார் அமிர்தநாதர்.

"அப்பா கட்டாயம் சாய்ப்பிலே சொல்லிவையுங்கன்" என்றான் மோகன்.

"ஆனால், ஒருகாரியம்" எனத் தொடர்ந்துகூறினார் அமிர்தநாதர். "அந்த முத்தையாவீட்டார் இருக்கிறார்களே. சாச்சாவீட்டு இராசையா—சென் வின்சென்ற் டீ போல் கூட்டத்தில்சேர்ந்தஒருவர்—அவர்களைப் பற்றி நேற்றுக் கோயிலடியிலே சொன்னார். அது முட்டுப்பட்டஒரு குடும்பம். முத்தையா கார்அடித்து ஆசுப்பத்திரியிலாம். ஆறுமாதஞ் சென்றாலும் ஆள் வீடுவந்துசேராதாம். அவருடைய மனைவி கடை இன்னநிறமென்று அறியாதவள் இப்பொழுது மரக்கறி வியாபாரந் தொடங்கியிருக்கிறாள் என்றார். மூன்றியும் அவர்களிடம் கையிருப்பில்லை. வீட்டிலே நாலுபிள்ளைகள்; எல்லாம் வளருகிறவயது. கஞ்சிக்குக் காற்றாய்ப்பறக்கிறார்கள்."

"அவர்களுக்கும் நமக்கும் என்ன அப்பா?" என்றான் மோகன் மீடுக்கோடு.

அமிர்தநாதர் வேதாகமப்புத்தகத்தை எடுத்தார். குறிப்புவைத்த இடத்தைத் திறந்தார். "இதைக் கேளுங்கள். இவ்வுலகசம்பத்தையுடைய ஒருவன் தன் சகோதரன் இக்கட்டுப்படுகிறதைக்கண்டும், அவனுக்குத் தன் உள்ளத்தை மூடிக் கொண்டால் தேவசிநேகம் அவனிடத்தில் நிலைப்பதெப்படி?" பின்பு வாசிப்பதை நிறுத்திவிட்டு அமிர்தநாதர் சொன்னார். அந்த முத்தையாவீட்டாருக்குக் காலம் கஷ்டமாக இருக்கிறது. இந்தக் கஷ்டநிலைமையில் நாம் அவர்களுக்கு உதவிசெய்யலாம். ஒருகிழமைக்குப் பத்துரூபா கொடுக்கலாம். துரையுடைய தகப்பனும், மலருடையதகப்பனும், இன்னும் இரண்டுபேர் அப்படிச்செய்வார்களாம். அப்படியென்றால் வானெலிப்பெட்டி வாங்குவதை நாம் பின்போட வேண்டிவரும்" என்று முடித்தார்.

மோகன் பெருமிதம் பொங்கும் பார்வையுடன் தன் அப்பாவைப் பார்த்தான். நன்மையைஅறிந்தவர் தன் அப்பாதான்என எண்ணிக் கொண்டான். சௌந்தரிதானும் எப்படி அப்பாவுடன்சேர்ந்து தன் தனிச்செலவிலிருந்து ஐம்பதுசதமாகிலும் கொடுத்து உதவலாம்என்று சிந்தித்தாள். அச்சிந்தனையில் புது வானெலியை மறந்தேவிட்டாள்.

"சர்வேசுரன் உலகத்தை எவ்வளவாக நேசித்தாரென்றால் தம்முடைய ஏகசுதனைத் தந்து, அவர்மேல் விசுவாசமாயிருக்கிற எவனும் கெட்டுப்போகாமல் நித்தியசீவனை அடையும்படி அருளியிருக்கிறார். உலகத்துக்கு ஆக்கினைத் தீர்வையிடும்படி சர்வேசுரன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், உலகம் அவராலே இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். அவரை விசுவசியாதவனை கடவுளின் ஏகுமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிராதபடியால் ஏற்கனவே தீர்வையிடப்பட்டிருக்கிறான்" (அரு. 3: 16–18).

—*—

அர்ச். இசிதோரும் அவர் மனைவியும்

அர்ச். இசிதோரும், அவர்மனைவியான மரியாளும் நெற்றிவியர்வை நிலத்திற்சிந்தப் பாடுபட்டுக் கடின வேலைசெய்து தங்கள் சீவியத்தைப் போக்கிவந்தார்கள். அர்ச். இசிதோர் தினமும் வயலிலேஉழுது தொழில் பார்க்கப்போகுமுன்னும், மரியாள் வீட்டுவேலைகளைத் தொடக்குமுன்னும் கோவில்சென்று திவ்வியபூசை கண்டு ஆண்டவரை ஆராதித்துத் தோத்தரித்து அவரது ஆசீர்வாதத்தை இரந்துகொண்டபின் நெற்றியிலே சிலுவை வரைந்து தங்கள்வேலைகளைத் தொடங்குவார்கள். தமது ஊழியத்திலே காதலாயிருந்து தம்மைத் தோத்தரித்துவரும் தாசர்கள் பேரிலே தேவன் தமது அருள்மாரியை நிறைவாகப் பொழிந்தருளுகிறார். அதனாலே அவர்களுடைய வேலைகள் ஆசீர்வதிக்கப்படவே, அவர்கள் பன்மடங்காய்ப் பலனடைகிறார்கள்.

நிற்க, அர்ச். இசிதோர் திரவியவானான ஒரு எசமானிடம் ஊழியத்திற்கமர்ந்து, அவன்வயல்களில் ஒன்றைத்திருத்திச் செய்கைபண்ணிவரலானார். மற்றவர்களிலும் இவர் குறைவாகவேவேலை செய்துவந்தபோதும் இவரதுநிலமோ அதிக செழுமையடைந்து அதிகபலனைக் கொடுக்கலானது. அதைக்கவனித்த அவரது எசமானின் ஏனையஊழியர்களுள் ஒருவன் மிகவும் பொறுமைகொண்டவனாய் ஓர்பிரமாணிக்கமுள்ள ஊழியனைப்போல் நடித்து எசமானைஅடைந்து, ஐயா! ஏனைய வேலைகாரர்எல்லாம் நேரத்துடன் வந்து வேலைசெய்ய, இசிதோர்என்றவன்மட்டும் கோவிலுக்குப்போவதாலே தினமும்காலையில் அதிகதாமதமாகவந்து வேலைகளைச் சரிவரச்செய்யாது விட்டுவிடுகிறான். அவனை நீர் கண்டியாமல் விட்டுவிடுவீராயின் உமதுவயல் பாழாய்ப்போவதுமன்றிப் பெரும்நஷ்டத்துக்கும் ஆளாவீர் என்றுபகர்ந்தான்.

எசமான் அதைக்கேட்டு உண்மையெனநம்பி அந்தப்புறணிக்காரனைப் பெரிதும் பாராட்டியபின், இசிதோரைத் தன்சமுகம்அழைத்து, நீகோவிலுக்குப்போவதாலே என்வேலைகள் நாசமாய்ப்போகின்றனவே. இன்னென்ன கெடுகாலம் என்று கடிந்துகொண்டான். இசிதோர் இதைக் கேட்டதும் துணிகரத்துடன் "ஐயா எசமானே! நீர் உலகத்திலுள்ள ஆஸ்திகளைஎல்லாம் திரட்டிக்கொடுத்தபோதிலும் சர்வேசுரனுகிய என் முதல்எசமான்மட்டிலே எனக்குள்ள கடமையைச் செலுத்தியபின்னரே உம்முடைய ஊழியத்துக்கு வருவேன். என்றாலும், உமக்குநான் ஊழியஞ்செய்பவனைகையால், என்னால் இயன்றளவு பிரமாணிக்கமாய் ஊழியஞ்செய்துவந்தேன் என்பது உண்மை. இவ்விதமே என் மனச்சாட்சிக்கு விரோதமில்லாது இனிமேலும் உழைத்துவருவேன்என்று உறுதியாகக்கூறுகிறேன்" எனமொழிந்தார். தீர்க்கமான இப்பதிலைக் கேட்ட எசமான் கோபந்தணிந்தானெனினும் முற்றிலும் திருப்திகொள்ளாதவனைத் தானேவே இசிதோரின்வேலையை ஆராயவேண்டுமென்று தீர்மானித்தான். தமது பிரமாணிக்கமுள்ள தாசரைச் சருவேசுரன் ஒருபோதும் கைவிடவேமாட்டார். ஒருநாட்காலை எசமான் இசிதோரின் வயலுக்குச்சென்று பார்த்தபோது, என்ன ஆச்சரியம்! இதுகாலவரை அவன் பார்த்திராத இருபுதியமனிதர் இருசோடு வெண்மையான எருதுகளைப்பூட்டி அவ்வயலை உழுவதைக்கண்ணுற்றுச் சித்தப்பிரமைகொண்டவனைத் திகைத்துநின்றான். சற்றுவேளையின்பின் திவ்வியபூசை கண்டுகொண்டு இசிதோர் திரிவித்து வயலுக்குப்போய் வேலையைத் தொடங்கியவுடனே ஆச்சரியத்திலும் ஆச்சரியம்! அங்கு கலப்பைபிடித்து உழுதுநின்ற இருமனிதரும், வெள்ளைஎருதுகளும் திடீரென மறைந்துபோக இசிதோர்மட்டும் தனிமையாக நின்றார்.

எசமான் ஆச்சரியவசத்தனாய் மெதுவாக இசிதோர்அருகேசென்று அந்தவயலிலே சற்றுமுன் வேலை செய்த இரண்டுஆட்களும் யார்? என்றுவினவினான். அவர் "எசமானே! இங்கு என்னைத்தவிரப் பிறமனிதர் ஒருவருமில்லை. ஆனால், என்மன்றாட்டுகளுக் கெல்லாம் செவிசாய்த்துத் தமதுஇரக்கத்தையும்,

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேருதவியையும், அருட்பிரசாதத்தையும் தாராளமாய் எனக்குஅளித்துவரும் நமது ஆண்டவர்மட்டுமே எப்பொழுதும் என்னுடன் இருக்கிறார்"எனப்பதிலுரைத்தார். இதைக் கேட்டஎசமான் சர்வேசுரனேதமது சம்மனசுகளையனுப்பித் தமது தாசனாகிய இசிதோருக்கு உதவிபுரிந்து வருகிறாரென உணர்ந்துகொண்டு இசிதோரைப் பார்த்து, உண்மையை அறிந்துகொண்டேன்; இனிமேல்உனக்கு விரோதமாய் வரும் முறைப்பாடுகளை ஒருபொருட்டாய் மதியேன்; இன்றுமுதல் எனக்கிருக்கும் நிலபுலம் யாவற்றையும் உன் கண்காணிப்பில் வைக்கிறேன். நீயே எனக்குப் பதிலாயிருந்து சகலத்தையும் உன்இஷ்டப்பிரகாரம் நடத்தி வருவாய் எனமொழிந்து, அவரைத் தனதுகாரிய தரிசி ஆக்கிக்கொண்டான்.

இசிதோரும் சொல்லொணாதவிதமாய்த் தமக்குச் சகாயம்செய்துவந்த சர்வேசுரனுக்கு நன்றிசெலுத்தித் தமது சுகிர்தவழக்கத்தைக் கைநெகிழாமல் தினந்தோறும் திவ்வியபூசை கண்டுவந்தார். ஆதலால் அன்பனே, நீ ஓர்தொழிலாளியாய் இருக்கலாம். அன்றேல்உத்தியோகஸ்தனாய் இருக்கலாம். தினமும் உன்தொழிலை—உன்கடமையைப் பார்க்கப்போகு முன் கோவில்சென்று திவ்வியபூசை கண்டு ஆண்டவரை ஆராதித்து, வணங்கித் துதித்து, நன்றியறிந்த தோத்திரம்புரிந்து, சகலநன்மைச் சுரூபியானஅவர் தமது அருட்பிரசாதங்களை மழைமாரியாகப் பொழிந்தருளுகிற அவ்வேளையிலே உனது ஆத்துமசரீரத்துக்கு வேண்டியநன்மைகளை இரந்து பெற்றுக்கொள்வாயாக. "முந்தமுந்தச் சர்வேசுரனுடைய இராச்சியத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள்; மற்றதெல்லாம் உங்களுக்கு வலியக் கொடுக்கப்படும்" (மத். 6: 33).

—*—

தேவதாய்

பதினைந்து நூற்றாண்டுகளுக்கு முன் எபேசு றோமைச்சக்கிராதிபத்தியத்தின் ஓர் மாநகரம். கத்தோலிக்கருக்கு அது விசேஷம்பெற்ற நகர்.

431-ம் ஆண்டு உலகக்கத்தோலிக்க மேற்றிராணிமார் அங்கு ஓர் மாநாடு கூடினார்கள். பரிசுத்தகன்னிமரியாய் "தேவதாய் தானோ?" என்றபிரச்சினையைத் தீர்ப்பதே அம்மாநாட்டின் நோக்கம்.

மரியாய் கன்னிகைஎன்பதிற் சந்தேகமில்லை. தேவன்தாமே வேதாகமத்திற் கூறியிருந்தார். "ஆறாம் மாதத்திலே கபிரியேல் என்னுந் தேவதூதன் ..... சூசையப்பர் என்னப்பட்ட ஓர்மனிதனுக்கு விவாகபந்தனமான ஓர் கன்னிகையிடத்தில் வந்தார்." இது நடந்து நானூறு ஆண்டுகளின்பின் அதே தேவன் வழுவாவரமுள்ள தமது திருச்சபையின் வாயாற்கூறலானார்.

மாநாட்டிற்குவந்த சபைப்பிதாக்களும், சமயபண்டிதரும் வேதாகமத்தை ஆராய்ந்தார்கள். திருச்சபையின் தொடக்கத்திலிருந்துவந்த பாரம்பரியத்தைச் சீர்தூக்கிநோக்கினர். நியாயமுறைகளை எடுத்தாண்டனர். பரிசுத்த கன்னிமரியாய் உண்மையாகவே தேவதாய்என நிச்சயித்தனர். அது கத்தோலிக்க விசுவாசசத்தியம் என்றும் கைக்கொள்ளப்படும்.

பட்டணத்துமக்கள் குதூகலித்தனர், தீவர்த்திகள்ஏந்தி வீதிகள் தோறுஞ்சென்று ஆர்ப்பரித்தனர். தேவமாதாவை வாயார நெஞ்சார வாழ்த்தினர். மேற்றிராணிமாரை ஊர்வலமாக அவர்களின் இல்லிடத்திற்கு அழைத்துச்சென்றனர்.

டயானா தேவதையைப் பூசித்து வந்த தமதுநகரம் தேவஅன்னையின் நகரமாயிற்று. "மரியாய் தேவஅன்னை" என்றகோஷம் வானைப்பிளந்தது.

மனிதவர்க்கத்தினரின் இரட்சகரை ஈன்றதின்நிமித்தம் அவள் எம் எல்லோருடையவும் அரியஅன்னை. கிறிஸ்து எம்மைத் தமது சகோதரராக்கிக்கொண்டதின் நிமித்தமும் நாம் மரியம்மாளின் மக்களன்றோ.

— 11-ம் பத்திநாதர்

* * *

மரியே! தேவனின் கன்னித்தாயே, மனுக்குலத்தின் அன்னையே, எம் எல்லோரையும் உம்முடன் ஒன்றுசேர்த்து, பரிசுத்தராய், உண்மையும் அன்புமுள்ளோராய், உம்மை எமக்குத் தாயாராய்த்தந்த உமது குமாரன் யேசுக்கிறிஸ்துவுக்கு அளித்தருளுவீர்.

புதிய கத்தோலிக்க ஆஸ்பத்திரிக்கு அத்திவாரக்கல் நாட்டுகிறார் அப்போஸ்தலிக்க

ஸ்தானாபதி ஆண்டகை

யாழ்ப்பாணத் திருச்சபைச் சரித்திரத்திலே பொன்அட்சரங்களால் பொறிக்கப்படவேண்டிய மற்றுமோர் புனிதநாள் இம்மாதம் 3-ந்திகதி (3-5-58) சனிவாரமாகும். அன்று காலை 11 மணியளவில் கொழும்புத்துறைப் புனிதவளனார் தாபனத்தின் கீழ்த்திசைப் பிரதானவாயிலில் பாப்பரசின் வெண்பொன் நிறக்கொடி பட்டொளிவீசிப் பறந்துகொண்டிருக்க, தாபனக்கொடிகள்சோபனம்கூறிநிற்க, தாபனத்தின் அனாதைச்சிறாரும், வயோதிபரும், சாதனாகழகமாணவரும், கத்தோலிக்கபெரியார் பலரும் இருமருங்கும் அணிவகுத்துநிற்க, குருப்பிரசாதிகள் ஐவர், திருச்சிலுவைக் கன்னியர்பதின்மர் ஆதியோர் எதிர்கொண்டழைக்கப் பாப்பரசரின் அப்போஸ்தலிக்க ஸ்தானாபதியாகிய மகாமேன்மை தங்கிய ஜேம்ஸ் ஆர். நொக்ஸ் ஆண்டகைஅவர்கள் எமது மேற்றிராணிஆண்டவர்அவர்கள்சமேதராய்ப் புதிய கத்தோலிக்க ஆஸ்பத்திரிக்குத் தமதுகரத்தால் அத்திவாரக்கல நாட்டுமுகமாக எழுந்தருளினார்.

அவர் பிரதானவாயிலை வந்தடைந்ததும் கொழும்புத்துறைத் தாபனதலைவரும், யாழ்ப்பாணப்பிரிவின் திருச்சிலுவைக் கன்னியர்சபையின் சிரேஷ்டரான சங். தாயார் அலோய்சியா அவர்களும் ஆண்டகைஅவர்களை வரவேற்றுத் திருச்சிலுவைக்கன்னியரை அறிமுகம்செய்துவைத்தனர்.

தொடர்ந்து ஆண்டகை அவர்கள் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்த மைதானத்தில் அமைக்கப்பெற்ற அழகிய பட்டுக்குடையின்கீழ் அமர்ந்து திருச்சடங்காசார உடுமானங்களை அணிந்து சிரசில் திருமுடிபுனைந்து அத்திவாரத்தில் இடவேண்டியகல்லை முந்தஆசிநீர் கொண்டு ஆசீர்வதித்தார். அத்திவாரக்கல்லில் இடவேண்டிய திருப்பண்டங்களையும், பரிசுத்தபொருட்களையும் அழகியசிமிழ்களில்இட்டு, தமது திருக்கரத்தில் புதிய ஆஸ்பத்திரிக்கு அத்திவாரக்கல் நாட்டியதும் திருவைபவம் இனிதே முடிவடைந்தது.

— நிருபர்

எமது கத்தோலிக்க பிரசுரங்கள்

	ரூ. ச.
பாலர்குறிப்பிடம் ...	40
சின்னக் குறிப்பிடம் ...	75
பெரிய குறிப்பிடம் ...	1-75
மெய்விவாகக் குறிப்பிடம் ...	05
உறுதிப்பூசுதற் குறிப்பிடம்	அச்சில்
சத்தியவேத தர்ப்பணம் போதககாண்டம் (Part I) ...	2-50
எனது பூசைப் புத்தகம் திவ்வியபூசைஆராதனையை முழுதாய் அடக்கியது.	
கிளேஸ் பேப்பர் ...	5-00
மோக்ஷபாதை (கலிக்கோ) ...	4-50
,, (தோல்) ...	7-00
முத்தித்திறவுகோல் (கலிக்கோ) ...	2-50
,, (தோல்) ...	3-50
செபச்செண்டு ...	75
பிரசித்த ஆராதனையின் சாதாரண செபங்கள் ...	2-00
திவ்விய பூசையின் சாதாரண செபங்கள் ...	40
நித்திய ஆராதனை ...	25
இரா ஆராதனை ...	25
திருமணித்தியாலம் ...	40
திவ்வியபூசை மகத்துவம் ...	2-50
பூசை உதவி மந்திரம் ...	40
பூசை உதவி மந்திரம் (மட்டை) ...	15
வேதாகம வாசிப்பு ...	90
சற்பிரசாத அன்பன் ...	20
யேசுநாதரின் சுவிசேஷம் அல்லது நான்கு சுவிசேஷங்களின் ஒப்புமை ...	2-90
பசாம்	1-50
சிலுவைப் பாதை ...	30
மகா மனந்திரும்புதல் இயக்கப் பிரசங்கங்கள் ...	1-00
சுவிசேஷ விரித்துரை (பசாமுடன்) ...	6-50
(பசாமில்லாமல்) ...	5-00
கத்தோலிக்கு கீர்த்தனைமாலை லத்தீன் 1-ம் பகுதி (நோட்டில்லாமல்) ...	75
தமிழ் 2-ம் பகுதி (நோட்டில்லாமல்) ...	75
இரண்டும்சேர்த்துக் கட்டியது (நோட்டில்லாமல்) ...	1-50
லத்தீன் (1-ம் பகுதி நோட்டுகளுடன்) ...	2-25
தமிழ் (2-ம் பகுதி நோட்டுகளுடன்) ...	2-25
தமிழ் லத்தீன் இரண்டும் (நோட்டுகளுடன்) ...	4-75
கிறீஸ்துநாதர் சரித்திர ஆராய்ச்சி ...	75
ஆண்டவர் சரித்திரம் (Part I) ...	90
,, (Part II) ...	90
,, (Part III)	90
திருஇருதய வணக்கமாதம் ...	1-50
தேவமாதாவின் வணக்கமாதம் ...	1-50
மரியாயின் மாசில்லாத இருதயப் பொக்ஷம் ...	1-50
அவர்கள் மூன்று சிறுவர்கள் (பாத்திமா) ...	2-50
கிறீஸ்துநாதரும் அவருடைய போதனைகளும் ...	1-50
நவதின உற்சவம் ...	75
தரும அப்பம் ...	1-00
பத்திச் சபைகள் ...	20
ஆத்தும தரிசனம் ...	20
தமிழரின் பூர்வசரித்திரம் ...	50
ஹெலேனா அல்லது திருக்காய அடையாளம்பெற்ற இலங்கைக் கன்னிகை சரித்திரம் ...	35
அர்ச். லூயிமேரி கிறிஞ்ஞோன் சீவிய சரித்திரம் ...	40
புதியஏற்பாட்டின் திருப்பலி ...	20
Oremus Book ...	1-25
ஆத்துமாக்களின்அழுகைக்குரல் ...	1-55
ஞானவொடுக்கப் பிரசங்கம் ...	1-50
இலங்கும் மகிமைமுடி ...	30
அர்ச். வாரம் ...	95

அதிபர்,
சஞ்சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணக் கத்தோலிக்க...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வோமென்று யாவரும் பிரதிக்கினை பண்ணிக்கொண்டார்கள்.

அன்றுபிற்பகல் 4 மணிக்கு தொழிலாற்றும்பாவனையாய் ஒருகரத்தால் வாச்சிஏந்தியபடியும், மறுகரத்தால் தொழிலாளரை அழைக்கும்பாவனையாயும் செய்யப்பெற்ற சஞ்சூசைமாமுனிவர் திருச்சொரூபம், கண்களைக் கவரக்கூடியமுறையில் அலங்கரிக்கப்பட்டிருந்தபட்டணவீதிகளால் சுற்றுப்பிரகாரமாக எடுத்துச் செல்லப்பட்டது.

யாழ்ப்பாணப்பட்டணக் கிறீஸ்துவர்களும், ஏனையவர்களும் பெருந்திரளாக இந்தச்சுற்றுப்பிரகாரத்தில் கலந்துகொண்டார்கள். அது யாழ்ப்பாணக் கடல் அணைமைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த அழகியபந்தலை அடைந்ததும் பாப்பரசரின் ஸ்தானாபதிஆண்டவர்அவர்களால் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம்அருளப்பட்டது. தொழிலாளர்களின் பிரதிநிதிகள் அங்குகொண்டுவந்திருந்த தொழில்ஆயுதங்களும், கடலும், படகுகளும் ஆசீர்வதிக்கப்பட்டன.

மேதினம் யாழ்ப்பாணக்கத்தோலிக்கர்மத்தியில் பக்திக்குரியதினமாகவும், நன்றியறிந்த தோத்திரதினமாகவும், தொழிலாளர்களிடையே பரஸ்பரஅன்பை வளர்க்குந்தினமாகவும், அறிவுவிருந்து அருந்துந்தினமாகவும் இருந்தமை பெரிதும் மகிழ்ச்சிக்குரியதே.

விளம்பர விகிதம்

	ரூ. ச.
நன்றியறிந்தஸ்தோத்திரம் ...	2 00
மரணஞாபகம் ஒரு அங். ...	2 00
ஓடர் நிசி (Order Nisi) இரண்டுமுறைக்கு ...	10 00

மற்றும் விளம்பரங்களுக்குக் கடிதமூலமாகவோ, அன்றேல் நேரிலோ மனுப்பண்ணிக்கொள்ளவும்.

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

● பிரான்சிலே லையன்ஸ்நகர் அதிமேற்றிராணியாரான கருதினால் ஜேர்லியர்ஆண்டவரின் தலைமையிலே சர்வதேச ஆகாயவிமானிகளின் திருயாத்திரைஒன்று வருகிற ஆனிமாதத்தில் லூர்துதிருப்பதிக்கு நடந்தேறவிருக்கிறது. ஏற்கனவே 1,700 பேருக்கு மேற்பட்ட ஆகாயவிமானிகள இந்த யாத்திரையில் கலந்துகொள்ள முன்வந்துள்ளார்கள். விமானிகளின்யாத்திரைகளை அடியிட்டவரான கருதினால் ஜேர்லியர்ஆண்டவர் பிரான்சிய படைகளின் விக்கார்ஜெனறலாவர்.

யோபு: டேய் மணி! பாலுவுடைய விலாசம் தெரியுமா உனக்கு?

மணி: தெரியாதே...ஏண்டா அவனுக்கு ஒருகடிதம்எழுதி விலாசம் கேட்டால் தெரியுமே!

ஜீவா: எனக்கு ஒருமுறையும் சுவீப் அடிக்குதில்லையே?

நவம்: சுவீப்அடிக்கிற டிக்கெற்பார்த்து எடுத்தால்தானே விழும்.

"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, May 8-1958.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org